பக்கங்கள்: ஆறு

Registered as a Newspaper

★ காஞ்சிபுரம்
★ பெனாரிஸ்
★ கெவி தஞ்சூர்
★ பாட்லி
★ பட்டுவேஷ்டிகள்

மற்றும் சகலவிதமான
பிளவ்ஸ் பீஸ் வகைகளுக்கும்

ராசி சில்க்ஸ்

நியூ மார்க்கட்
உட்புறம்
யாழ்ப்பாணம்.

உதயன்

விலை
ரூபா 3/50

மங்கள வைபவங்களுக்
கேற்ப உடுபுடவைகள்

ராசி சில்க்ஸ்
70, நியூ மார்க்கட்
உட்புறம்
யாழ்ப்பாணம்.

சுடர்: 5 சுக்கில ஆண்டு மாசி மீ 11 உ வெள்ளிக்கிழமை ஹிஜ்ரி 1410 ஸபர் பிறை 26 (23 - 02 - 1990) UTHAYAN - A LIVELY NATIONAL TAMIL DAILY கதிர்: 17

### பேச்சு நடத்த சென்னை வருமாறு

# பத்மநாபா, வரதருக்கு கருணாநிதி அழைப்பு!

## முட்டுக்கட்டை நிலையை நீக்க முயற்சி

சென்னை, பெப்ரவரி. 23

ஈழத்தமிழர் பிரச்சினைக்குத் தீர்வு காண்பது குறித்து தம்முடன் மேலும் பேச்சுவார்த்தை நடத்துவதற்காக சென்னைக்கு வருமாறு ஈ. பி. ஆர். எல். எவ். செயலதிபர் திரு. கே. பத்மநாபா, வடக்கு - கிழக்கு மாகாண முதலமைச்சர் திரு. அ வரதராஜப்பெருமாள் ஆகியோருக்கு தமிழக முதல்வர் கலைஞர் மு. கருணாநிதி அழைப்பு விடுத்திருக்கிறார்.

இது தொடர்பாக தாம் நடத்திவரும் பேச்சு வார்த்தைகளில் ஏற்பட்டிருக்கும் முட்டுக்கட்டை நிலையை நீக்கும் முயற்சியாகவே கலைஞர் இந்த அழைப்பை விடுத்திருப்பதாக சென்னைச் செய்திகள் தெரிவித்தன.

கலைஞர் கருணாநிதி தெரிவித்த யோசனை குறித்து தங்களது இறுதி முடிவை நாளை (24 ஆம் திகதி) தெரிவிப்பதாக ஈ.பி.ஆர்.எல்.எவ் வட்டாரங்கள் முன்னர் தமிழக முதல்வரிடம் தெரிவித்திருந்தன.

அந்த குறிப்பிட்ட தினத்தில் முடிவை கூற முடியாத நிலையில் அவர்கள் இருப்பதாக தற்போது கலைஞருக்கு தகவல் தெரிவிக்கப்பட்டிருக்கிறது.

இதனையடுத்தே திரு. வரதராஜப்பெருமாள், திரு. பத்மநாபா ஆகியோரை சென்னைக்கு வருமாறு அழைப்பு விடுப்பது எனத் தீர்மானிக்கப்பட்டதாக சென்னைச் செய்திகள் தெரிவித்தன.

இதேவேளை —

வடக்கு, கிழக்கு மாகாண சபையில் 17 இடங்களைக் கொண்டிருக்கும் இலங்கை முஸ்லிம் காங்கிரஸ் கட்சியுடனும் தாங்கள் கலந்து பேச வேண்டும் என்றும்-

அதனால் தங்கள் முடிவைத் தெரிவிக்க காலதாமதம் ஏற்படலாம் என ஈ. பி. ஆர் எல். எப். வட்டாரங்கள் சென்னையில் தெரிவித்ததாக மற்றொரு தகவல் வெளியாகியுள்ளது. (உ - 9)

### முச்சந்தி முரளி



அடகு வைச்ச நகையளை அடை வைச்ச நகை எண்டு நினைச்சுத் திருப்பிக் குடுக்காம இருக்கினம் போலை...!

### விடுதலைப் புலிகள் தவிர்ந்த

# ஈழத்தமிழ் குழுக்களுடன் நேற்றும் கலைஞர் பேச்சு!

சென்னை, பெப். 23

ஈழப் பிரச்சினைக்குத் தீர்வு காண்பது குறித்து தமிழக முதலமைச்சர் கருணாநிதி, நேற்று ஈழத் தமிழ்க் குழுக்களுடன் தொடர்ந்து பேச்சுக்கள் நடத்தினார்.

தமிழீழ விடுதலைப் புலிகள் தவிர்ந்த மற்றைய குழுக்களுடன் நேற்று பேச்சுக்கள் நடந்தன.

ஈ. பி. ஆர். எல். எவ்., ஈ.என்.டி.எல்.எவ், ரெலோ, புளொட் ஆகிய குழுக்களுடனேயே தமிழக முதல்வர் நேற்றுப் பேச்சுக்கள் நடத்தினார்.

நேற்றைய பேச்சுக்களின் பின்னர் தாம் நடத்திய பத்திரிகையாளர் மாநாட்டில் கலைஞர் கருணாநிதி சொன்னதாவது;

வடக்கு-கிழக்கு மாகாண சபையைக் கலைத்து விட்டு மறு தேர்தலுக்குத் தயாராக வேண்டும் என்ற தமிழீழ விடுதலைப் புலிகள் இயக்கத்தின் கருத்தை, என்னுடன் இன்று பேச்சுக்கள் நடத்திய அமைப்புக்களின் பிரதிநிதிகளிடம் தெரிவித்தேன்.

இக்குழுக்களின் பிரதிநிதிகள் இதற்குப் பதிலளிக்கையில்,

( 5ஆம் பக்கம் பார்க்க)

## இந்தியாவிலிருந்து திரும்பியோருக்கு நிவாரணம்

யாழ்ப்பாணம், பெப். 23

இந்தியாவில் அகதிகளாக இருந்து சொந்தச் செலவில் நாடு திரும்பியோருக்கான நிவாரணம் ரூபா ஆறாயிரம் அடுத்த வாரமளவில் வழங்கப்பட இருக்கிறது.

இவர்களுக்கு அரச உதவி எதுவும் இதுவரை வழங்கப்படவில்லை.

இத்தகையவர்களில் ஐ. நா. அகதிகள் ஸ்தானிகராலயம் தெரிவு செய்துள்ள 293 குடும்பங்களே அடுத்த வாரம் நிவாரணம் பெற இருக்கின்றன. (இ-3.10)

# 'கஜராஜ்' விமானத்தில் ஹெலிகள் பலாலியிலிருந்து இந்தியாவுக்கு!

யாழ்ப்பாணம், பெப். 23

பலாலியிலிருந்து இந்தியப் படையினரின் கனரக வாகனங்கள், டாங்கிகள், ஹெலிக்கொப்டர்கள் என்பன படிப்படியாக இந்தியாவிற்குத் திருப்பி அனுப்பப்பட்டு வருகின்றன.

பாரிய வாகனங்களை ஏற்றி இறக்கக்கூடிய "கஜராஜ்" விமானம் தினமும் பலாலியில் வந்திறங்கி பொருள்களையும் வாகனங்களையும் ஏற்றிச் செல்வதாக பலாலியில் பாதுகாப்பு வட்டாரங்கள் தெரிவித்தன.

பலாலி விமான நிலையத்திலும் அதைச் சுற்றியுள்ள பிரதேசத்திலும் இந்தியப் படையினர் நிலை கொண்டிருந்த பகுதிகளில் இருந்து படிப்படியாக முகாம்கள் அகற்றப்படுவதாகவும், கூடாரங்கள் கழற்றப்படுவதாகவும் தெரியவந்தது. இந்த இடங்களை ஸ்ரீலங்காப் படையினர் பொறுப்

(5-ம் பக்கம் பார்க்க)

# வரதருக்கு தமிழகத்தில் பாதுகாப்பு; கருணாநிதி அளித்த உறுதி மொழி!

## நிராகரித்தார் வடக்கு, கிழக்கு மாகாண முதல்வர்

சென்னை, பெப் 23

வடக்கு - கிழக்கு மாகாண சபை கலைக்கப்பட்டால் அதன் பின்னர் ஈ. பி. ஆர். எல், எவ் வின் தலைவர்களுக்கும் மாகாண முதலமைச்சர் திரு. அ. வரதராஜப் பெருமாளுக்கும் தமிழகத்தில் உரிய பாதுகாப்பு வழங்க தமிழக முதல்வர் கலைஞர் மு. கருணாநிதி முன்வந்திருப்பதாக சென்னைப் பத்திரிகைச் செய்திகள் தெரிவித்தன.

ஆனால் கலைஞர் அளித்த பாதுகாப்பு வழங்கும் உறுதியை ஈ. பி. ஆர். எல்.எப். தலைவர்கள் ஏற்க மறுத்துவிட்டதாகவும் அச்செய்திகள் தெரிவித்தன.

இதேசமயம் மாகாணசபை கலைப்புத் தொடர்பான கோரிக்கை குறித்து ஈ. பி. ஆர். எல். எப். வட்டாரங்களில் கேள்வி ஒன்று எழுப்பப்பட்டுள்ளது.

''வடக்கு - கிழக்கு மாகாணத்திலிருந்து இந்தியப்படை

(5 ஆம் பக்கம் பார்க்க)

### சுபநேரம்

23 — 02 — 1990

வெள்ளிக்கிழமை மாசி 11

சுபநேரம்:
6 . 31 முதல் 8 . 01 வரை

ராகுகாலம்:
11 . 01 முதல் 12 . 31 வரை

மஹாசிவராத்திரி விரதம்

# முல்லைத்தீவு மக்கள் வங்கி முன் பெண்கள் சத்தியாக்கிரகம்

முல்லைத்தீவு, பெப். 23

முல்லைத்தீவு மக்கள் வங்கி முன் நேற்று வியாழன் காலை பெண்கள் சிலர் சத்தியாக்கிரகம் இருந்தனர்.

1988 ஆம் ஆண்டு பணம் கட்டியும் அடகு நகைகள் மீள வழங்கப்படாததை ஆட்சேபித்தே இவர்கள் சத்தியாக்கிரகம் இருந்தனர்.

மக்கள் வங்கியின் பிராந்திய முகாமையாளர் திரு. எம். அருளானந்தம், முல்லைத்தீவு மக்கள் வங்கி முகாமையாளர் திரு. எஸ். மகாலிங்கம் ஆகியோர் அளித்த உறுதி மொழிக்கு இணங்க சத்தியாக்கிரகம் பின்பு கைவிடப்பட்டு வங்கி திறக்கப்பட்டது.

அடகு நகைகளை மார்ச் 31 ஆம் திகதி வழங்க நடவடிக்கை எடுக்கப்படும் என்றும் வெளிநாடு செல்வோருக்கு அல்லது திருமண தேவைக்கு நகைகள் தேவைப்படுபவர்களுக்கு அதற்கு முன் கொழும்பில் வைத்து வழங்க உதவி புரிவதாகவும் இவர்கள் உறுதி அளித்தனர். (இ-99)

# ஆயுத ஒப்படைப்பு உத்தரவு; புலிகளுக்கும் பொருந்தும் என்கிறார் ரஞ்சன் விஜேரத்னா

சட்டத்திற்கு புறம்பாகவும் அரசின் அனுமதியுடனும் ஆயுதங்கள் வைத்திருப்பவர்கள் அனைவரும் மார்ச் முதலாம் திகதிக்கு முன்னர் தங்கள் ஆயுதங்ளை அரசிடம் ஒப்படைக்க வேண்டும் என பாதுகாப்புத் துணை அமைச்சரும் வெளியுறவு அமைச்சருமான

(5 ஆம் பக்கம் பார்க்க)

# கலைஞரிடமிருந்து செய்தி புலிகள் எதிர்பார்ப்பு!

ஈழத் தமிழர் பிரச்சினைக்குத் தீர்வு காண்பதற்காக அடுத்த கட்டப் பேச்சுவார்த்தைகள் குறித்து தமிழக முதல்வர் கருணாநிதியிடமிருந்து எந்நேரமும் எங்களுக்கு தொலைபேசிச் செய்தி வரலாம் — இப்படி விடுதலைப் புலிகள் மக்கள் முன்னணியின் செயலாளர் நாயகம் திரு. யோகரட்ணம் யோகி கொழும்பில் தெரிவித்ததாக சென்னைச் செய்திகள் கூறுகின்றன, (உ-எ)

# மண்டபம் முகாமில் தங்கியுள்ள போராளிகள் மீது கட்டுப்பாடு!

சென்னை. பெப் 23

மண்டபம் அகதி முகாமில் பாதுகாப்பு நடவடிக்கைகள் பலப்படுத்தப்பட்டுள்ளன.

முகாமில் தங்கியுள்ள போராளிகள் மீது கடுமையான கட்டுப்பாடுகள் விதிக்கப்பட்டுள்ளன.

அகதி முகாமின் நுழைவாயிலில் உள்ள காவல் அறையின் மீது மணல் மூடைகள் அடுக்கப்பட்டுள்ளன. தமிழ்நாடு சிறப்புப் பொலீஸ் படையினர் 'ஸ்டென்கன்' முதலிய நவீன துப்பாக்கியுடன் காவலுக்குநிறுத்தப்பட்டுள்ளனர்.

தமிழ்நாடு சிறப்புப் பொலீஸ்படையின் இன்ஸ்பெக்டர் ஜெனரல் வால்டர் தேவாரம் மண்டப முகாமில் மூன்று நாட்களாகத் தங்கி இருந்து ஏகே- 47 ரக துப்பாக்கியுடன் போராளிகள் வந்தாலோ, தாக்குதல் நடத்தினாலோ அவர்களை எப்படிச் சமாளிக்க வேண்டும் என்று பொலீஸாருக்கு பயிற்சி அளித்து வருகின்றார்.

முகாமில் தங்கியுள்ள சாதாரண அகதிகளும், தமிழ்ப் போராளிகளும் தாங்கள் நினைத்த போதெல்லாம் முகாமை விட்டு ஊருக்குள் சென்றுவர அனுமதி வழங்கப்பட்டு வந்தது.

அதற்கு இப்போது கடுமையான கட்டுப்பாடுகள் விதிக்கப்பட்டுள்ளன.

முகாமுக்கு வெளியே சென்று தேவையான பொருள்களை வாங்க காலை 8 மணிமுதல் 9 மணி வரையும், மாலை 3 மணி முதல் 4 மணி வரை மட்டுமே இனி அனுமதி உண்டு.

மற்ற நேரங்களில் முகா

(5 ஆம் பக்கம் பார்க்க)



மண்டபம் பகுதியில் கடந்த திங்கள் அதிகாலை இடம் பெற்ற துப்பாக்கிச் சூட்டுச் சம்பவத்தில் படுகாயமடைந்த தமிழக பொலீஸ்காரர் மூவரும், ஒரு கூலித் தொழிலாளியும் மதுரை ராஜாஜி அரச மருத்துவ மனையில் சிகிச்சைக்காக அனுமதிக்கப்பட்டிருந்தபோது எடுக்கப்பட்ட படம்.

# தமிழக பொலீஸார் சிலர் இலங்கை அரசு ஒற்றர்கள்?

சென்னை, பெப் 23

இராமநாதபுரம் மாவட்டத்தில் பணி புரியும் சில பொலீஸ் அதிகாரிகள் இலங்கை அரசின் ஒற்றர்களாகச் செயல்படுகின்றனர்.

இப்படி மண்டபம், இராமேஸ்வரம் பகுதிகளில் இருந்து புறப்பட்டுச் செல்லும் சில போராளி இயக்கங்களின் தலைவர்கள் தமிழ்நாடு பொலீஸ் துறையின் மீது குற்றஞ் சுமத்தியுள்ளனர்.

''இப்பொலீஸ் அதிகாரிகள் இலங்கை அரசுக்கும், தமிழீழ விடுதலைப் புலிகளுக்கும் பல தகவல்களை உடன் அனுப்பி வைக்கின்றனர். இந்த அதிகாரிகளின் உதவியுடன் ஆயுதங்கள்கடத்தப்படுகின்றன''

இப்படி புளொட் இயக்கத்தின் இராணுவப் பிரிவுத் தலைவர் மாணிக்கதாசன் புகார் கூறினார்.

ஆயுதக் கடத்தலைத் தடுக்க இராமநாதபுரம் மாவட்டத்தில் கிராம மக்கள் குழுக்கள் அமைக்கப்பட்டுள்ளன என்பது குறிப்பிடத்தக்கது. (உ-9)

இளைய தலைமுறையின் இதயம் கவரும் இன்றைய நாளிதழ்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## சின்னஞ்சிறு விளம்பரம்

### விற்பனைக்கு

எம்மிடம் அண்மையில் வெளியிடப்பட்ட மருத்துவ நூல்கள் (Medical Books) அதி நவீன கம்பியூட்டர் நூல்கள் (Latest Computer Books) கதைப்புத்தகங்கள், சபாப் புத்தகங்கள் மற்றும் சகலவிதமான வாழ்த்துமடல் களையும் மொத்தமாகவும் சில்லறையாகவும் பெற்று கொள்ளலாம். (மண்டேலா ரேடர்புத்தகசாலை) இல: 02 பஸ் நிலையம், யாழ்ப்பாணம் (1551)

Bajaj Chebak ஸ்கூட்டர் விற்பனைக்குண்டு. தொடர்பு Dr. K. பாலகிருஷ்ணன் 189, இருபாலை வீதி, கோண்டாவில் கிழக்கு, கோண்டாவில். (2619)

புத்தம் புதிய Eastern Bicycle விற்பனைக்கு உண்டு. எல்லா உபகரணங்களுடன் தொடர்பு கொள்க. S. Pavendra 47, Temple Road, Jaffna. (2613)

### தேவை

யாழ் போதனா வைத்திய சாலைக்கு அண்மையில் தனியார் நிறுவனம் ஒன்றின் கட்டிட அலுவலகம் (Building Construction Office) ஒன்று அமைப்பதற்கு ஒரு வீடு உடன் தேவைப்படுகிறது. No—626 C/o உதயன் (2609)

கொப்பி கட்டுவதற்கும், விற்பனையாளராகப் பணி புரிவதற்கும் பெண் பிள்ளைகள் தேவை. வெள்ளிக்கிழமை நேரில் சமுகம் தரவும். முன் அனுபவம் விரும்பத்தக்கது ஸ்ரீகாந் புத்தகசாலை 165, மின்சாரநிலைய வீதி, பஸ் நிலையம் முன்புறம், யாழ்ப்பாணம். (சி/3894)

வட மாகாணத்தில் அமைந்துள்ள பிரபல விற்பனை நிலையத்திற்கு வேலை செய்யும் ஊழியர்கள் தேவை. 20 வயதிற்கு உட்பட்டவர்கள் விண்ணப்பிக்கவும். முன் அனுபவம் உள்ளவர்களுக்கு முன்னுரிமை வழங்கப்படும். தொழிலில் ஆர்வமுள்ளவர்கள் உடனடியாக விண்ணப்பிக்கவும் கவர்ச்சியான சம்பளம் கொடுக்கப்படும். விண்ணப்பம் அனுப்ப வேண்டிய முகவரி: இல. 624. C/o உதயன். C/3887

யாழ் நகரில் இயங்கி வரும் ஆடைகள் தயாரிக்கும் தொழிற்சாலைக்கு மேற்பார்வையாளர்களும் பிறேசியர் (Brassiers) வெட்டுவதிலும் தைப்பதிலும் அனுபவம் வாய்ந்த பெண் தொழிலாளர்களும் தேவை மிகவும் அனுபவம் உடையவர்களுக்கு தகுதியான சம்பளம் வழங்கப்படும். 5 3 90 க்கு முன்னதாக விண்ணப்பிக்கவும். No. 627. C/o உதயன். (2616)

### வீடு தேவை

அரச பணியில் உள்ள ஒரு குடும்பத்துக்கு அடிப்படை வசதிகள் கொண்ட வீடு ஒன்று குத்தகைக்கு அல்லது வாடகைக்குதேவை. நேரிலோ அல்லது கடித மூலமோ தொடர்பு கொள்க. ஸ்ரீகாந் புத்தகசாலை, 165, மின்சார நிலைய வீதி, பஸ் நிலையம் முன்புறம் யாழ்ப்பாணம். (C/3898)

யாழ்ப்பாண மாநகரசபை எல்லைக்குள் நகரத்தை அண்மித்த பகுதியில் கூட்டுறவு நிறுவனம் ஒன்றிற்கு காரியாலயமாக உபயோகிக்க வீடு அல்லது கட்டடம் தேவை. மாவட்ட செயலாளர் T. C. C. S. Union, 182/4 ஸ்ரான்லி வீதி, யாழ்ப்பாணம். (11859)

### TYPEWRITERS

Typewriters வாங்கவும், விற்கவும் சிறந்த முறையில் திருத்திக் கொள்ளவும் நாடுங்கள் Fudo Enterprises 39/17, மின்சார நிலைய வீதி, 3ம் ஒழுங்கை, யாழ்ப்பாணம். (C/3828)

### தவறிவிட்டது

மனுவேற்பிள்ளை குகேந்திரன் ஆகிய எனது அடையாள அட்டை (662151319 V) 10-01-90 அன்று சாட்டி பள்ளிவாசல் முன்பாக தவறி விட்டது. கண்டெடுத்தோர் உதயன் காரியாலயத்திலோ அல்லது சாட்டி பள்ளிவாசலில் ஒப்படைக்கும்படி கேட்டுக் கொள்கிறேன். சன்மானம் வழங்கப்படும். (11835)

### வட இந்திய யாத்திரை

வட இந்தியாவின் புனித தலங்களைத் தரிசிப்பதற்கும், வழியிலுள்ள விசேடங்களைப் பார்ப்பதற்கும், ஆறுபேருக்கு மேற்படாத குழுவில் சேர்ந்துபோக விரும்புபவர்கள் தொடர்பு கொள்ளவும். மு. கனகசபை, இல: 6 சுவாமியார் வீதி, கொழும்புத்துறை, யாழ்ப்பாணம். (11834)

### அறிவித்தல்

யாழ் செயலக சிற்றுண்டிச் சாலை நடத்துனர் ஒருவரைத் தெரிவு செய்வதற்கான கேள்விப்பத்திரங்கள் கோரப்படுகின்றன. முடிவு திகதி 1990 03-02 கேள்விப்பத்திரக் கட்டணம் ரூபா 25/- செயலாளர் யாழ் செயலக நலன் புரிச்சங்கம். (11832)

### புத்தகம்

சித்திரக் கதைகள் (காமிக்ஸ்) முத்து லயன் - திகில் வெளியீடுகளும் மீண்டும் இந்திய சகல சஞ்சிகைகளும் வந்து விற்பனையாகின்றது. பொக்கற் கலண்டர்களும் கிடைக்கும். ராஜன் புத்தக சாலை 12. பஸ் நிலையம், யாழ்ப்பாணம். (2596)

### காஸ் குக்கர் திருத்த

உங்களுடைய GAS குக்கரில் பிழைகளா? இல்லையெனில் புதிய உதிரிப்பாகங்கள் மாற்ற வேண்டுமா? எதுவாயினும் மிகத்திறமையான முறையில் குறித்த தவணையில் திருத்திக் கொடுக்கப்படும். அதற்கு நீங்கள் நாட வேண்டிய இடம் D· முஸ்தபா யுப்ளிபஸார் 2 ஆம் மாடி யாழ்ப்பாணம். (1996)

### போட்டோஸ்ரட்

யாழ் பஸ்நிலையத்தில் தங்களின் சகல ஆவணங்களையும் மிகவும் தெளிவாக போட்டோ ஸ்ரற்செய்து கொள்ளவும், ஆங்கில ரைப்பிங், மொழி பெயர்ப்புகளுக்கும் ஸ்ரீ காந் புத்தகசாலை, 165, மின்சார நிலைய வீதி, பஸ் நிலையம் முன்புறம் யாழ்ப்பாணம் (C/3717)

### சமூகக்கல்வி

வெளிவந்துள்ளது! விற்பனையாகின்றது!!, சமூகக் கல்வி ஆண்டு 11 (திருத்திய புதிய பாடத்திட்டம்) ஆக்கியோன்: ந. தர்மபாலன், சகல புத்தகசாலைகளிலும் பெற்றுக் கொள்ளலாம். (2576)


## சென்ஜேம்ஸ் விளை. போட்டி

குருநகர், பெப் 23

யாழ்- சென்:ஜேம்ஸ் மகா வித்தியாலய இல்ல மெய்வல்லுனர் போட்டி நாளை சனிக்கிழமை பிற்பகல் 2 மணிக்கு வித்தியாலய விளையாட்டு மைதானத்தில் நடைபெறும்.

பிரதேச உள்ளூராட்சி உதவி ஆணையாளர் திரு. எஸ். திவகலாலா பிரதம விருந்தினராகக் கலந்து கொள்வார்.

குருநகர் கொத்தணி அதிபர் திரு. ஜி. பி. அல்பிரட் கௌரவ விருந்தினராகக் கலந்து கொள்வார்,

பரிசில்களை சிவமலர் திவகலாலா வழங்குவார். (க-51)

# வறியோரின் நன்மை கருதியே 100 கிராம் லக்ஸ்பிறே பைக்கட்

யாழ்ப்பாணம், பெப். 23

வறியோரின் நன்மை கருதியே 100 கிராம் லக்ஸ்பிறே பால் மாவை சந்தைக்கு விட்டுள்ளோம்.

வடக்கு - கிழக்கு பிரதேச லக்ஸ்பிறே விற்பனை முகாமையாளர் திரு. ராதாகிருஷ்ணன் இவ்வாறு தெரிவித்தார்.

ஹோட்டல் ஞானம்ஸில் நடைபெற்ற வடபகுதிலக்ஸ்பிறே விநியோகஸ்தவர்களின் ஒன்றுகூடல் நிகழ்ச்சியில் அவர் இதனைத் தெரிவித்தார் இந்த ஒன்றுகூடல் நிகழ்ச்சியின் போது வட பகுதியைச் சேர்ந்த லக்ஸ்பிறே விநியோகஸ்தர்களும் பல நோக்குக் கூட்டுறவுச் சங்க விற்பனை முகாமையாளர்களும், தென்பகுதி லக்ஸ்பிறே விற்பனைப் பிரதிநிதிகளும் வேறுபல பிரமுகர்களும் கலந்து கொண்டனர்.

திரு. ராதாகிருஷ்ணன் தொடர்ந்து பேசுகையில்;

உலகச் சந்தையில் பால்மா விலை அதிகரிக்கப்பட்ட போதிலும் எமதுமக்களுக்கு எந்த வகையிலும் பால்மா கிடைக்க வேண்டும் என்பதற்காகவே 100 கிராம் பைக்கெட்டிலும் நாம் லக்ஸ்பிறேயை அறிமுகப்படுத்தியுள்ளோம் என்றார்.

### ரி. வி. செற்

இந்த வைபவத்தில் யாழ். பல்கலைக்கழக மருத்துவ பீடத்துக்கு வடபகுதி லக்ஸ்பிறே விநியோகஸ்தர்கள் ஒருங்கிணைந்து ஐம்பதினாயிரம் ரூபா பெறுமதியான ஒரு கலர் ரி. வி. செற், டெக என்பவற்றை அன்பளிப்பாக வழங்கினர்.

வடக்கு - கிழக்கு பிரதேச லக்ஸ்பிறே விற்பனை, முகாமையாளர் திரு. ராதாகிருஷ்ணன் இதற்கான ஏற்பாட்டைச் செய்திருந்தார்.

டாக்டர் திரு. நாகேஸ்வரனிடம் வடபகுதி லக்ஸ்பிறே விநியோகஸ்தர்கள் இவற்றை வழங்கினர்.

இதேவேளை மேற்படி ரி. வி. செற்றும் டெக்கும் யாழ். ஆஸ்பத்திரியில் வைக்கப்படும் என்றும் நோய்களின் தன்மை பற்றி நோயாளருக்கும் மருத்துவ பீட மாணவர்களுக்கு காட்சி மூலம் விளக்க அது பயன்படுத்தப்படும் எனவும் டாக்டர் நாகேஸ்வரன் அங்கு தெரிவித்தார். (இ-10)

## இன்றும் நாளையும் விசேஷ பஸ் சேவை

யாழ்ப்பாணம் பெப். 23

சிவராத்திரி தினத்தை முன்னிட்டு வடபிராந்திய போக்குவரத்துச் சபை திருக்கேதீஸ்வரத்திற்கு விசேஷ பஸ் சேவைகளை ஏற்பாடு செய்துள்ளது.

இந்த பஸ்சேவைகள் இன்று வெள்ளிக்கிழமையும் நாளை சனிக்கிழமையும் நடைபெற உள்ளன.

யாழ் நகரிலிருந்து கேரதீவு வரையும், சங்குப்பிட்டியிலிருந்து திருக்கேதீஸ்வரம் வரையும், இணைப்பு சேவைகளாக இந்த விசேஷ சேவை நடைபெற உள்ளது. (இ - 9)


## Vacancies in Bahrain

பொறியியலாளர் [Eng. Const] — 2
Quantity Surveyor — 2

உடனடியாக வேலைவாய்ப்புண்டு

சகல வசதிகள் உட்பட தகுந்த சம்பளம்

தொடர்பு கொள்க →

ஏ. கே. சிவஞானம்
171 A, பிறவுண் வீதி,
யாழ்ப்பாணம்.

NEEMS AGENCY
32 A, Horton Place,
Colombo - 7

[11843]

## WANTED

1. ENGLISH TYPIST — FEMALE
2. ACCOUNTS CLERK — FEMALE with knowledge of BOOK - KEEPING.

Please send applications on or before 28 - 02 - 90

K. A. ENGINEERS,
142, Palaly Road,
Thirunelvely, Jaffna.
[Near Campus Junction]

[2622]

இறப்பிலும், இணைபிரியாத இன்னுயிர் தம்பதிகள் காசிலிங்கம் - பெரியநாயகி

அவர்களின்

## 45ம், 60ம் நாள் நினைவஞ்சலி





அமரர்
**காசிலிங்கம்**
தோற்றம்: 15 - 07 - 1909
மறைவு: 25 - 12 - 1989

அமரர்
**திருமதி பெரியநாயகி**
தோற்றம்: 15 - 04 - 1921
மறைவு: 09 - 01 - 1990

எங்கள் குடும்பத்தின் குலவிளக்குகளே! எமை வாஞ்சையுடன் பெற்றெடுத்து, எம் இடர்கள் நீக்கி, கல்வியறிவூட்டி களிப்புறும் வேளையினிலே காலன் வந்தணைத்ததேனோ! பப்பா, அம்மா என கதறுவது உங்கட்கு கேட்கவில்லையா பரிதவிக்க சென்றுவிட்டீர்களே உங்கள் அவலச் செய்தி கேட்டு, கடல் கடந்து வாழும் பாசமகன்மார் கலங்கிக் கதறுகின்றனர். என்றும் உங்கள் ஆசி எங்களிற்கே.

உங்கள் ஆத்மா சாந்தியடைய நயினை நாகபூசணித் தாயை வேண்டி நிற்கின்றோம்.

எம் அன்புத் தெய்வங்களின் மரணச் சடங்குகளில் பங்கு கொண்டவர்கள் அனுதாபச் செய்தி அனுப்பியவர்கள், மலர்வளையங்கள் கொடுத்தவர்கள், மற்றும் பல வழிகளில் உதவியவர்கள், ஆறுதல் கூறித் தேற்றியவர்கட்கு எமது உளங்கனிந்த நன்றியைத் தெரிவிக்கின்றோம்.

இவரின் பிரிவால் வாடும்:
பாசமிகு பிள்ளைகள், சகோதர சகோதரிகள்,
மருமக்கள், பேரப்பிள்ளைகள்,
உறவினர், நண்பர்கள்.

கலாசாலை வீதி,
திருநெல்வேலி வடக்கு. (11846)

90 A/L விஞ்ஞான மாணவர்களுக்கு
24-02-90 நாளை சனிக்கிழமை ஆரம்பம்
★ பௌதிக இரசாயனம் ★
Sat & Sun 11.30 — 12.30
ஆசிரியர் Mr. நாகரட்ணம் Bsc
✶ 3 ஆம் குறுக்குத்தெரு, யாழ்ப்பாணம் ✶
(சி/3902)

## அறிவித்தல்

தவிர்க்க முடியாத காரணங்களால் கொழும்பில் தங்கியிருந்த நான் தற்சமயம் எனது வதிவிடத்துக்கு வந்துள்ளேன் என்றும், என்னிடம் காணி வழக்கு தொடர்பாக உறுதிகள், ஆவணங்கள் கொடுத்தவர்கள் சந்திக்க விரும்பினால் எனது வதிவிடத்தில் (ஊரெழு) வந்து சந்திக்கலாம் எனவும் அன்புடன் அறிவிக்கிறேன்.

க. சிவசுப்பிரமணியம், BA, LLB
சட்டத்தரணி & நொத்தாரிஸ்

ஊரெழு கிழக்கு,
சுன்னாகம். (11845)

## ★ துர்க்காதேவி ரூர்ஸ் ★

✶ சித்திரை மாதச் சுற்றுலா
✶ பகவான் சாயிபாபாவின் தரிசனம்
★ தென் இந்தியாவில் கல்வி கற்க விரும்புவோர்க்கு வசதிகள் செய்துகொடுக்கப்படும.

குடும்பத்துடனும், நண்பர்களுடனும் தென் இந்திய யாத்திரை சுற்றுலாவிற்கு நாடவேண்டிய இடம்;

**துர்க்காதேவி ரூர்ஸ்,**
இராமையா செட்டியார் ஒழுங்கை,
(சாந்தி தியேட்டருக்கு முன்)
யாழ்ப்பாணம்.

**கிறீன் ஐலன் பீச் இன்,**
58 A, உபதிஸ்ஸ றோட்,
கொததலாவலைக் காடன்,
பம்பலப்பிட்டி, கொழும்பு - 4.
தொ. எண். 584291

யாத்திரை சுற்றுலா விபரங்களுக்கு உதவி செய்யும் தொடர்பு நிலையங்கள்:

லங்கா லொட்ஜ்
இல. 25,
செட்டியார் தெரு,
கொழும்பு - 11
T.P. 28552

திரு. பே. விபீஷணன்,
ராம் ஜி பென்ஸி,
மாணிக்க விநாயகர் கோவில்,
361, காலி வீதி, பம்பலப்பிட்டி,
கொழும்பு-4 T.P. 501543

திரு. கே. ஜி. சிறீதர்
8/14, பாடும்மீன் ஒழுங்கை,
மட்டக்களப்பு.

திரு. P. அழகு
45, ராஜ சோதி கபே,
கண்டி வீதி, வவுனியா.

Dr. மகாலிங்கம்,
அரவிந்தன் பார்மஸி,
கண்டி வீதி,
மாங்குளம்.

வூட்லண்ஸ் டீ ஹோட்டல்,
கந்தசாமி கோயிலடி,
கண்டி வீதி,
கிளிநொச்சி.

திரு. பொன் தில்லைநாதன்
அதிபர்
நல்லூர், பூநகரி.

திரு. S. இராமலிங்கம்
கொழும்பு ஸ்டோர்,
பளை.

(சி/3893)

## 21ஆம் ஆண்டு நினைவஞ்சலி



தோற்றம்:
07-11-22

மறைவு:
15-02-69

**சங்கீத பூஷணம் ஆ. நமசிவாயம்**
(அண்ணாமலை இசைத்தமிழ் மன்றஸ்தாபகர்)

உங்கள் இனிய முகம் எங்கள் உள்ளத்தில் நிழலாகத் தெரிகின்றது. உங்கள் ஆத்ம சாந்திக்காக இறைவனை வேண்டுகின்றோம்.

பாசநினைவுகளில்
ந. அன்னம்மா
மக்கள், மருமக்கள், பேரர்கள்.

தமிழகம்
பனிக்கர் வளவு, திருநெல்வேலி. (11901)


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## பொய்யாமொழி

**குறள்:**

இரந்து உயிர்வாழ்தல் வேண்டின் பரந்து
கெடுக உலகியற்றி யான்.

**பொருள்:**

உலகத்தைப் படைத்தவன் உலகில் சிலர் இரந்தும் உயிர் வாழுமாறு ஏற்படுத்தியிருந்தால், அவன் இரப்பவரைப்போல் எங்கும் அலைந்து கெடுவனாக.

உதயன்

இல: 292/2, நாவலர் வீதி, யாழ்ப்பாணம். தொலைபேசி: 2288
23- 02- 1990 த. பெ. இலக்கம் : 23

## விரைந்து செயற்படுக

சமீப நாட்களாக யாழ்ப்பாணத்தில் தொலைபேசிக் கம்பித் திருட்டுக்கள் இடம் பெற்று வந்தன. எனினும் இவை இயன்ற அளவு உடனுக்குடன் சீர்செய்யப்பட்டு தொலைபேசி இணைப்புகள் வழங்கப்பட்டன. தமிழீழ விடுதலைப் புலிகளினால் தொலைபேசிக் கம்பித் திருடர்களுக்கு கடும் எச்சரிக்கையும் விடுக்கப்பட்டது. திருட்டுச் சம்பவங்கள் சில நாட்கள் குறைந்தும் காணப்பட்டன.

ஆனால் இந்தத் திருட்டுக்களுக்கு எல்லாம் சிகரம் வைத்தாற் போல் செவ்வாய்க்கிழமை இரவு ஒரு சம்பவம் நடைபெற்றிருக்கிறது.

யாழ். பண்ணை தொலைபேசி பரிவர்த்தனை நிலையத்துக்கு அருகே கோட்டை, பழைய தபால் நிலையம் ஆகியவற்றுக்கு முன்பாக உள்ள பகுதியில் பிரதான தொலைபேசி லைன்கள் வரும் இடத்தில் கம்பிகள் வெட்டப்பட்டுள்ளன.

இப்பகுதிகள் நீண்டகாலமாக பொதுமக்கள் எவரும் நுழைய முடியாத பகுதிகளாகக் கருதப்பட்டு வந்தன. 1987 ஆம் ஆண்டுக்கு முன் தமிழ் ஈழப் போராட்டம் உச்சம் அடைந்திருந்த காலத்தில் தலைக் கறுப்புத் தெரிந்தாலே சூடு விழும் இடமாக இப்பகுதிகள் இருந்து வந்தன.

கடந்த மாத பிற்பகுதியில் இந்திய அமைதிப்படையின் வெளியேற்றத்துடன் எவரும் தாராளமாக நடமாடக்கூடிய சூழ்நிலை உருவாகி இருந்தது. இதனை சமூகவிரோதிகள் நன்கு பயன்படுத்திக் கொண்டுள்ளனர் என்பதை செவ்வாய்க்கிழமை இரவு இடம்பெற்ற தொலைபேசிக் கம்பித் திருட்டுச் சம்பவம் புலனாக்குகிறது.

பல ஆயிரக்கணக்கான ரூபா பெறுமதியான தொலைபேசிக் கம்பிகளை சில நூறு ரூபாக்களுக்கு இவர்கள் விற்கிறார்கள்.

யாழ்ப்பாணத்தில் 120 தொலைபேசி லைன்கள் உள்ளன. யாழ் பண்ணை தொலைபேசி பரிவர்த்தனை நிலையத்துக்கு அருகில் பிரதான தொலைபேசி லைன்கள் வரும் இடத்தில் கம்பிகள் வெட்டப்பட்டிருப்பதால் அத்தனை தொலைபேசிகளும் செயல் இழந்துள்ளன. அத்தனை லைன்களையும் கண்டுபிடித்து தொலைபேசிகளை இயங்க வைப்பது சுலபமான காரியமும் அல்ல.

பெரும் சிரமங்களின் மத்தியில் மீண்டும் இணைப்பு வழங்கப்பட்டாலும் கம்பிகள் மீண்டும் வெட்டப்படமாட்டா என்பதற்கு எந்தவித உத்தரவாதமும் இல்லை.

அதுதான் போலும் இந்த விடயத்தில் தொலைபேசித் திணைக்களம் சிறிது கறாராக இருப்பதாகத் தெரிகிறது. தொடர்ந்து நடைபெறும் இப்பிரச்சினைக்கு தீர்வு காணப்படும் வரை தொலைபேசி இணைப்பை வழங்கப்போவதில்லை என்று திணைக்கள அதிகாரி ஒருவர் தெரிவித்துள்ளார்.

தொலைபேசித் திருட்டைத்தடுத்து நிறுத்த நடவடிக்கை எடுக்கப்பட்டு மீண்டும் கம்பிகள் வெட்டப்படமாட்டா என்பதற்கு உறுதி கிடைத்த பின்னரே மீண்டும் இணைப்பு வழங்கப்படும் என்றும் தெரிவிக்கப்பட்டிருக்கிறது.

ஆகவே இப்பகுதிகளின் நிர்வாகத்துக்கும் பாதுகாப்புக்கும் பொறுப்பானவர்கள் உடனடியாக இதில் தலையிட வேண்டும். சமூக விரோதிகள் ஒழித்துக் கட்டப்பட வேண்டும்.

அதே சமயம் யாழ். தொலைபேசி பரிவர்த்தனை நிலைய அதிகாரிகளுக்கும் ஒரு வேண்டுகோள் விடுக்கிறோம்.

யாழ் தொலைபேசிப் பரிவர்த்தனை நிலையத்தில் இருந்து அழைப்புகளைப் பெறக்கூடிய நிலை இருக்கும் போது, அத்தியாவசிய சேவைகளாகக் கருதப்படும் ஆஸ்பத்திரிகள், பத்திரிகைகள், அரச அலுவலகங்கள் போன்றவற்றுக்காவது தொலைபேசிப் பரிவர்த்தனை நிலையத்தில் இருந்து அழைப்புகளை எடுக்க வசதிகள் செய்து கொடுக்கப்பட வேண்டும்.

மின்சாரம் போன்று தொலைபேசியும் மக்களின் ஓர் அத்தியாவசிய சேவை. இதனை சம்பந்தப்பட்டவர்கள் அனைவரும் உணர்வார்கள் என்று நம்புகிறோம்.

## 32 பதில் அதிபர்கள் நிரந்தரமாக்கப்படுவர்

பருத்தித்துறை, பெப் 23

வடமராட்சிக் கோட்டக் கல்விக் பிரிவில் 32 பதில் அதிபர்கள் நிரந்தர அதிபர்களாகப் பதவி ஏற்கச் சிபார்சு செய்யப்பட்டுள்ளது.

கடந்த மூன்றாண்டுகளுக்கு மேலாக பதிலதிபர்களாகச் சேவையாற்றிய அதிபர்களின் பெயர்கள் வடமராட்சி உதவிக் கல்விப் பணிப்பாளர் திரு. பொ. வீரபத்திரனினால் சிபார்சு செய்யப்பட்டு யாழ் பிரதிக் கல்விப் பணிப்பாளருக்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளன.

32 பதில் அதிபர்களுக்கும் விரைவில் வடக்கு கிழக்கு மாகாணசபைக் கல்விச் செயலாளர் நிரந்தர அதிபர் பதவிகளை வழங்கவுள்ளார் எனத் தெரிகிறது.

அதே சமயம் அதிபர் தரங்களுக்கான போட்டிப் பரீட்சைக்குத் தோற்றியோருக்கான நேர்முகப்பரீட்சை பற்றிய எவ்வித தகவல்களையும் மத்திய அரசு இதுவரை அறிவிக்கவில்லை என்பது குறிப்பிடத்தக்கது. (இ-118)

# யாழ். தபால் நிலைய ஊழியர்கள்

# வேலைநிறுத்தம் செய்ய முயற்சி

யாழ்ப்பாணம், பெப். 23

யாழ்-தபால் நிலைய ஊழியர்கள் தொழிற் சங்க நடவடிக்கையில் இறங்க முயற்சி செய்வதாக அறிய வந்தது.

6 மாதத்திற்குரிய ஆபத்து அலவன்ஸ் உதவிப்பணம் யாழ்-தபால் நிலைய ஊழியர்களுக்கு வழங்கப்படாததாலேயே இந்த முயற்சியில் இறங்கியுள்ளனர்.

கடந்த 20ஆம் திகதி இந்த ஊழியர்கள் தாய் சங்கத்துக்கும், தபால் அத்தியட்சகருக்கும் அனுப்பிய கடிதத்தில், இருவாரத்தில் இந்த உதவிப் பணம் கிடைக்காது விட்டால் தொழிற் சங்க நடவடிக்கையில் இறங்க இருப்பதாக அறிவித்துள்ளனர். (இ-3, 10)

## பத்திரிகையாளர் கொலை: நாடாளுமன்றில் பிரஸ்தாபம்

கொழும்பு, பெப் 23

பத்திரிகையாளரானரிச்சர்ட் டிசொய்சாவின் கொலைச் சம்பவம் பற்றி நேற்று முன் தினம் நாடாளுமன்றத்தில் பிரஸ்தாபிக்கப்பட்டது.

நவசமசமாஜக் கட்சி தலைவரும் ஐக்கிய சோஷலிச முன்னணியின் எம். பி. யுமான திரு. வாசுதேவ நாணயக்கார இதுபற்றிச் சொன்னதாவது:

இலங்கையில் இடம்பெறும் மனித உரிமை மீறல்கள்பற்றி ரிச்சர்ட் டி சொய்சா கடந்த மாதத்தில் இருந்து நிறையச் செய்திகளை வெளியுலகுக்கு அனுப்பிவந்தார்.

இத்துறையில் அவர் ஆற்றிய குறிப்பிடத் தக்க பணிகளுக்காக லிஸ்பனில் இன்டர் பிரஸ் நிறுவனத்தில் ஐரோப்பிய பிரிவு ஆசிரியராக நியமிக்கப்பட இருந்தார்.

இரண்டு வாரங்களுக்கு முன்னர் இவர் நவசமசமாஜக் கட்சியின் தொழிற்சங்க அலுவலகத்துக்கு வந்து தொழிற் சங்கங்களை நசுக்கும் அவசரகாலச் சட்டவிதிகள்பற்றி விசாரித்து அறிந்து கொண்டார்.

இன்று (செவ்வாய்) அவர் நாடாளுமன்றம் வந்து மனித உரிமை மீறல்கள் பற்றி மேலும் தகவல்களைப் பெற்றுக்கொள்வதற்காக சுதந்திரக் கட்சி எம். பி க்களான மங்கள முனசிங்கா, மகிந்த ராஜபக்ஷ ஆகியோரைச் சந்திக்க இருந்தார்.

அதற்கு முன்னரே அவர் கடத்திச் செல்லப்பட்டு கொல்லப்பட்டுவிட்டார் என்று திரு. நாணயக்காரா சொன்னார்.

இச்சம்பவம் பற்றி நீதி விசாரணை நடைபெறுகிறது. விவரமான அறிக்கை ஒன்றைச் சமர்ப்பிக்க இருவாரகால அவகாசம் தரும்படி அமைச்சர் ரஞ்சன்விஜயரத்ன கேட்டுக்கொண்டார். (ஒ-எ)

### இன்று ஹோமம்

யாழ்ப்பாணம், பெப்23

அளவெட்டி பெருமாக்கடவை மகாகணபதி ஆலயத்தில் மகாகணபதி ஹோமம் இன்றுவெள்ளிக்கிழமைவிஸ்வநாராசணசர்மா தலைமையில் நடைபெறும். (க-ε)

## மட்டுநகர் வாலிபர்களுக்கு ஏற்பட்ட அனுபவம்

மட்டக்களப்பு பெப் 23

ரிசேவ் பொலீஸ் கான்ஸ்டபிள் நேர்முகப்பரீட்சைக்காக கொழும்புக்கு அனுப்பி வைக்கப்பட்ட 25 மட்டக்களப்பு வாலிபர்கள் பொலீஸ் நிலையத்தில் சில மணித்தியாலம் தடுத்து வைக்கப்பட்டனர்.

இச் சம்பவம் கடந்த வாரம் இடம் பெற்றது.

மட்டக்களப்பு பொலீஸ் நிலைய ரிசேவ் பொலீஸ் பிரிவில் பதிவு செய்தவர்கள் நேர்முகப்பரீட்சைக்கு கொழும்பு தலைமையகம் அனுப்பி வைக்கப்பட்டனர்.

கொழும்பில் முதல் நாள் இரவு இவர்கள் தங்கியிருந்த லொட்ஜ் சுற்றி வளைப்பில் இவர்களும் சிக்கிக் கொண்டனர். அன்றிரவு தடுத்து வைக்கப்பட்டு மறுநாள் விசாரணையின் பின்பு விடுதலையானார்கள்.

நேர்முகப் பரீட்சைக்குச் சென்ற சமயம் அங்கு தற்போதைக்கு நேர்முகப் பரீட்சை எதுவும் இல்லை என அதிகாரிகள் கைவிரித்து விட்டனராம்.

இதனை அடுத்து இந்த வாலிபர்களும் மட்டக்களப்பு திரும்பினர். (இ-21)

### இறைவரித் திணைக் களத்தில்

# இந்த ஆண்டுக்கான வாகன வரிப் பத்திரங்களைப் பெறலாம்

யாழ்ப்பாணம், பெப் 23

எதிர்வரும் திங்கள் முதல் இயங்கவிருக்கும் யாழ் - அரசாங்க செயலக இறைவரித் திணைக்களத்தில் இவ்வாண்டுக்கான மோட்டார் வாகனங்களுக்குரிய வரிப் பத்திரம் வழங்கப்படவிருக்கிறது.

கடந்த மூன்று வருடமாக இயங்காதிருந்த இந்த திணைக்களத்தை மீண்டும் திங்கள் முதல் இயங்கச் செய்ய நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

மோட்டார் வாகனம், மோட்டார் சைக்கிள் ஆகியவற்றுக்கு வரிப்பத்திரம் பெற வாகனத்தின் பதிவுப்புத்தகம், இவ்வாண்டுக்கும் செல்லுபடியான காப்புறுதிப்பத்திரம் ஆகியனவற்றைச் சமர்ப்பிக்க வேண்டும். அத் திணைக்களத்தில் இவற்றைச் சமர்ப்பித்தால் வங்கியில் பணம் செலுத்தும் பத்திரத்தை அவர்கள் வழங்குவார்கள். அப்பத்திரத்தைக் கொண்டு ஆஸ்பத்திரி வீதியில் உள்ள இலங்கை வங்கியின் பிரதான கிளையில் இயங்கும் கச்சேரி வங்கிப் பிரிவில் பணம் செலுத்த வேண்டும். மீண்டும் இறைவரித் திணைக்களத்தில் ரசீதை ஒப்படைத்து வரிப் பத்திரத்தைப் பெறலாம். வங்கியின் ரசீது பகல் 12.00 மணி வரை கச்சேரியால் ஏற்கப்படும்.

அதே நேரம் லொறி, மினிபஸ் ஆகியவற்றிற்கான வரிப் பத்திரம் பெற பதிவுப்புத்தகம், காப்புறுதிப் பத்திரம் ஆகியவற்றுடன் வாகன தகுதிச்சான்றிதழும் சமர்ப்பிக்க வேண்டும் என்று அறிவிக்கப்பட்டுள்ளது.

தகுதிச்சான்றிதழ் வழங்க பொலிஸ் அதிகாரி ஒருவர் நியமிக்கப்படவுள்ளதாகவும், அவர் பயிற்சி பெற கொழும்பு சென்றுள்ளதாகவும் அவர் வந்த பின்பே இவ் வேலைகள் ஆரம்பிக்கும் என்றும் தெரிவிக்கப்பட்டது.

அதே நேரம் 1987 ஆம் ஆண்டு நடைமுறையில் இருந்த கட்டண அடிப்படையில் பணம் அறவிடப்படும் என்றும், இவ்வாண்டுக்கு மட்டும் பணம் செலுத்தி வரிப் பத்திரம் பெறலாம் என்றும் இறைவரிப் பிரிவு அதிகாரி ஒருவர் தெரிவித்தார். (இ3,10)

## சிவராத்திரி விழாவின் தத்துவம்

இரவு சந்திரனால் ஆட்கொள்ளப்பட்டது. சந்திரனுக்குப் பதினாறு பின்னல்கள் அதாவது கலைகள் உண்டு. சந்திரன் ஒவ்வொரு நாளும் தேய்வுற ஒவ்வொரு பின்னம் அழிந்து அமாவாசை இரவன்று முற்றிலும் அழிகிறது. பின்பு ஒவ்வொரு பின்னமாகச் சேர்க்கப்பட்டு பௌர்ணமி இரவன்று பூரணத்துவம் அடைகின்றது.

மனதின் அதிபதியான தெய்வம் சந்திரனே ஆகும். சந்திரனுக்கும் மனதுக்கும் மிகவும் நெருங்கிய தொடர்புண்டு. தேய்வுக்கும் வளர்ச்சிக்கும் அவை இரண்டும் கீழ்ப்படிந்தவை.

மாதத்தின் இருண்டபாதிக் காலத்தில் ஒவ்வொரு நாளிலும் சந்திரனின் ஒரு சிறு பாகம் குறைகிறது. முடிவில் சதுர்த்தசி அன்று மிகவும் நுண்ணிய பகுதியே எஞ்சி நிற்கின்றது. இதனால்தான் சதுர்த்தசி சிவராத்திரி எனக் கூறப்படுகிறது.

அன்றிரவு முழுவதும் நாம் ஜெபத்திலும் தியானத்திலும் உணவு உறக்கம் என்ற எண்ணங்கள் இல்லாமல் கழிக்கவேண்டும். உறக்கம் இல்லாமல் இருக்கவேண்டும். என்பது ஒருவர் ஆன்மீக முன்னேற்றத்தில் விழிப்பாக இருக்க வேண்டும் என்பதைச் சுட்டிக் காட்டும் சின்னமாகும். அதேபோல, உண்ணாமல் இருக்க வேண்டும் என்பது புலன் அடக்கத்தின் அடையாளமாகும்.

ஆன்ம ஈடேற்றத்துக்காகவே நாங்கள் வழிபாடு செய்கின்றோம். சிவராத்திரி தினத்தன்று மனது அசைவற்ற நிலையை அடைய வேண்டும்.

நாம் எப் பொழுதும் சிவ வழிபாட்டில் ஈடுபட [illegible] வேண்டும். என்பது தான் சிவராத்திரியின் தத்துவமாகும்.

—'காந்தி'

## மகாசிவராத்திரியின் மகிமை

செல்வச் செருக்குக்கும் கல்விச் செருக்குக்கும் எட்டாதது பரம்பொருள் என்பதை விளக்குவது திருமாலும் பிரமாவும் இறைவனது அடிமுடி தேடியகதை.

பிரமாவும் விஷ்ணுவும் தங்களில் யார் பெரியவர் என்று வாதித்துக் கொண்டிருக்கையில் இலிங்கவடிவான ஓர் ஒளிப் பிழப்பு ஆகாயத்தையும் பூமியையும் அளாவியதாய் அவர்கள் முன் தோன்றிற்று அவர்கள் இருவரும் தங்கள் வாதத்தை நிறுத்திவிட்டு அவ்வொளிப் பிழம்பின் அடியையும், முடியையும்கண்டுதம்பெருமையை நிலைநாட்டுதற் தச்சங்கற்பஞ் செய்து கொண்டனர். காட்டுப்பன்றிவடிவிற் பூமியைப் பிளந்து கொண்டு விஷ்ணு கீழ் நோக்கிச் செல்ல அன்னப் பறவை வடிவிற் பிரமா மேலே பறந்து சென்றார்.

இருவர் முயற்சியும் பலிக்கவில்லை ''நாங்கள் தோற்றோம்'' என்று அவர்கள் அகந்தையொழிந்தனர் அரனடி பணிந்தனர்.

இந்த இலிங்கோற்பவ மூர்த்தி வெளிப்பட்டகாலமே மகாசிவராத்திரியாகும்.

மகாசிவராத்திரி மாசி மாதத்திலே தேய்பிறை பதின்னாலாம் நாளிலே (கிருஷ்ண பட்சத்துச் சதுர்த்தசியில்) வரும்விரதமாகும். நாள் முழுவதும் உணவை விடுத்து இரவு முழுவதும் கண் விழித்து முழு நேரத்தையும் சிவசிந்தனையிலும், சிவனடியார் கூட்டத்திலும், சிவகதை [illegible] ணியம் தரும். நள்ளிரவு [illegible] மாகும். இக்காலத்திற் சிவ தரிசனஞ் செய்வது மிகவும் விசேடமாகும்.

நயினை கிருஷ்ணசாமி கிருபானந்தா

### சமய நிகழ்வுகளில்

## தேர்த்திருவிழா

யாழ்ப்பாணம், பெப் 23

திருநெல்வேலி பழங்கிணற்றடி ஸ்ரீ வீரகத்தி விநாயகர் ஆலயத்தின் தேர்த்திருவிழா 24 ஆம் திகதி சனிக்கிழமை காலை நடைபெறும்.

நாதஸ்வர வித்துவான்கள் நல்லூர் சந்தானகிருஷ்ணன் குழுவினர், அளவெட்டி என். கே. பத்மநாதன் குழுவினர், இணுவில் சுந்தரமூர்த்தி குழுவினர், கோண்டாவில் கானமூர்த்தி குழுவினர் ஆகியோரின் இசை நிகழ்ச்சி இடம் பெறும். (க)

## சிவராத்திரி நிகழ்ச்சிகள்

### நல்லூர்

நல்லூர் பகவான் ஸ்ரீசத்திய சாயி இல்லத்தில் சிவராத்திரி விழா இன்று காலை5.45முதல் மாலை 4.30 மணி வரை கொண்டாடப்படும்.

### யாழ்ப்பாணம்

யாழ் மத்திய பகவான் ஸ்ரீ சத்தியசாயி சேவா நிலையத்தில் இன்று வெள்ளிக்கிழமை மாலை 6.00 மணி தொடக்கம் சனிக்கிழமை காலை 6.00 மணி வரை சிவராத்திரி விழா கொண்டாடப்பட இருக்கின்றது. ஓங்காரத்துடன் ஆரம்பமாகும் விழா தொடர்ந்த பஜனையைக் கொண்டு காலை நகர சங்கீர்த்தனத்துடன் முடிவடையும். பக்தர்களின் வசதி கருதி 180, நாவலர் வீதியிலுள்ள டாக்டர் எஸ். சண்முகலிங்கம் இல்லத்தில் விழா நடைபெறவுள்ளது என சமித்தியின் தலைவர் ஆ. இராஜகோபால் தெரிவித்தார்.

### யாழ் திருவள்ளுவர்

யாழ். திருவள்ளுவர் சனசமூக நிலையத்தின் சிவராத்திரி விழா நிலையத் தலைவர் திரு. க. சபாலிங்கம் தலைமையில் நடைபெறும். விழாவை நிலையப் போஷகர் திரு. க. சி. கிருஷ்ணன் ஆரம்பித்து வைப்பார். அன்றைய தினம் திருவள்ளுவர் மாதர் கிராம அபிவிருத்திச் சங்கத்தின் சிறுமியர்கள் நிலையக் கீதம், பஜனை, கும்மி, நடனம், நாடகங்கள், வில்லிசை தேனிசைமழை, ஆகிய நிகழ்ச்சிகள் இடம் பெறுகின்றன.

### நயினை

நயினை ஸ்ரீ நாகபூஷணி அம்பாள் ஆலயத்தின் மகா சிவராத்திரி விழாவில் விசேஷ அபிடேக ஆராதனைகளுடன் வேதபாராயணம், புராண படனம், இன்னிசை நிகழ்ச்சி நயினை பாடசாலை மாணவர்களின் பக்திப் பாடல்கள் ஆகியனவும் யாழ் பல்கலைக் கழக விரிவுரையாளர் திரு. மா. வேதநாதனின் சொற்பொழிவும் இடம் பெறும்.

சனிக்கிழமை காலையில் அம்பாள் சமுத்திர தீர்த்தம் ஆடும் காட்சியும் நடைபெ[illegible]. (க)

### அகில இலங்கைத் திருமுறை மன்றம்

அகில இலங்கைத் திருமுறை மன்றம் மகா சிவராத்திரியை ஒட்டி மன்றம் இன்று இரவு முழுவதும் யாழ்ப்பாணத்தில் பல ஆலயங்களில் திருமுறைப் பாராயணம் செய்யவுள்ளனர். இதன் முதலாவது நிகழ்ச்சியாக நல்லூர் ஸ்ரீ சட்டநாத சிவன் ஆலயத்தில் ஆரம்பித்து தொடர்ந்து நீராவியடி கடையிற் சுவாமி சிவன் ஆலயம், வண்ணார்பண்ணை சாந்தையர்மடம் ஸ்ரீ விநாயகர், ஆலயம், நாயன்மார் கட்டு அருள்மிகு ஸ்ரீ இராஜ இராஜேஸ்வரி அம்பாள் ஆலயம், அரியாலை ஸ்ரீ ஞான வைரவர் ஆலயத்தை தொடர்ந்து இன்னும் பல ஆலயங்களில் இந் நிகழ்ச்சி இடம் பெறும். (க)

### ஊரெழு

சிவராத்திரி தினத்தின் முன்னிரவில் ஊரெழு மேற்கு காளி கோவிலில் மகவம் நிறுவலம் மூத்த பெண் கலைஞர்களைக் கொண்டுவில்லிசை கலை நிகழ்ச்சி ஒன்றை அரங்கேற்றுகின்றது.

வேல் ஆனந்தனின் 'வைசறை' என்னும் சிறுகதை வசாவிளானூர் கலிஞர் ஆனந்தராஜாவால் வில்லிசை வடிவில் அரங்கேற்றப்படும். (க)

### வண்ணார்பண்ணை

வண்ணார்பண்ணை சாந்தையர்மடம் ஸ்ரீ கற்பக விநாயகர் கோவில் சைவசமய அபிவிருத்திக் கழகத்தின் 35 ஆவது ஆண்டு விழாவும், சிவராத்திரி விழாவும் 23 2-1990 வெள்ளிக்கிழமை மாலை 5 மணிக்கு மேற்படி விழாக்கள் ஆரம்பமாகி நடைபெறும்.

### திருநெல்வேலி

திருநெல்வேலி சைவ வித்தியாவிருத்தி சங்க சிறுவர் நல்வாழ்வு இல்லத்தில் (அனாதை இல்லம்) தங்கியிருக்கும் மாணவர்கள் மகா சிவராத்திரி விழாவை சிறப்பாக கொண்டாடுகின்றார்கள்.

### திருமுகம்

## திருத்தப்படாத இயந்திரங்கள்

விசுவமடு ஏற்று நீர்ப்பாசனத் திட்டத்தில் பயிரிடப்பட்டுள்ள சுமார் 250 ஏக்கர் உணவுப் பயிர்கள் நீரின்றி வாடும் நிலையில் உள்ளன.

1990 ஆம் ஆண்டுக்கான அரச அதிபர் பயிர்ச்செய்கை கூட்டத் தீர்மானத்தின்படி பெப்ரவரி முதலாம் திகதி இத்திட்டத்துக்கு நீர்ப்பாசனத் திணைக்களம் நீர் விநியோகித்திருக்க வேண்டும். விசுவமடு ஏற்று நீர்ப்பாசனப் பகுதிக்குரிய பாரிய நீர் இறைக்கும் இயந்திரங்கள் இன்னமும் திருத்தப்படாததால் இதனைச் செய்ய முடியவில்லை.

திணைக்களம் தக்க நடவடிக்கை எடுக்குமா?

கே. கார்த்திகேசு
விசுவமடு.

## முல்லைத்தீவு போக்குவரத்து சேவை

முல்லைத்தீவு மாவட்டத்தில் போக்குவரத்து சேவைகள் பாதிக்கப்பட்டிருப்பதால் பிரயாணிகள் பெரிதும் அவதிப்படுகிறார்கள்.

இ. போ. ச. முல்லைத்தீவிலிருந்து யாழ்ப்பாணத்துக்கு இரண்டு சேவைகளை மட்டுமே நடத்துகின்றது.

முன்பு இம்மாவட்டத்துக்கு நீர்கொழும்பு, கோண்டாவில், காரைநகர், பருத்தித்துறை, கிளிநொச்சி, வவுனியா ஆகிய இ. போ. ச. சாலைகள் தினமும் இரண்டு சேவைகளை நடத்தின. அத்துடன் முல்லைத்தீவு -யாழ்ப்பாணம் கடுகதி சேவையும் நடத்தப்பட்டது.

இந்த சேவைகள் இன்னமும் மீண்டும் ஆரம்பிக்கப்படவில்லை. முல்லைத்தீவில் இருந்து நண்பகல் 12 மணிக்குப் பின்னர் எதுவித வெளியூர் சேவையும் நடைபெறுவது இல்லை.

முல்லைத்தீவு-துணுக்காய் -பாண்டியன்குளம், முல்லைத்தீவு-மாங்குளம், முல்லைத்தீவு-இரணைப்பாலை, முல்லைத்தீவு-விசுவமடு-புதுக்குடியிருப்பு-ஒட்டுசுட்டான், முல்லைத்தீவு-நாயாறு, முல்லைத்தீவு-முத்தையன்கட்டு ஆகிய சேவைகளும் பாதிக்கப்பட்டிருக்கின்றன.

இ. போ. ச. இவற்றைக் கவனித்து போக்குவரத்துச் சேவையை சீர்செய்ய நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று தயவுடன் கேட்டுக் கொள்கிறேன்.

கே. குகநாதன்
முல்லைத்தீவு

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**ஞானக்கதிர்**

அன்பு - அறநெறி - ஆன்மீகம்

**வெளிவந்து விட்டது!**

மாசி மாத

**★ ஞானக்கதிர் ★**

இ போது விற்பனையாகிறது!!

★ சிவராத்திரி மகிமை.
★ மாசியும் மகமும்.
★ காயத்திரி பற்றி பாபா......
★ கலாநிதி சபா ஜெயராஜா எழுதும் சமயமும் கல்வியும் பற்றிய தொடர் கட்டுரை.
★ கடையிற் சுவாமி செய்த அற்புதங்கள்.
★ நோன்பு காக்கும் நலம். - நாலு பெண்கள் சொல்வது.
★ ரமண மகரிஷியின் ஆங்கிலக் கட்டுரை.
★ ஏழாலை, வசந்த நாகபூஷணி அம்பாள் கோவில் திருக்குட முழுக்குச் சிறப்பிதழ்.
★ அவதார புருஷர்களின் சிறப்பம்சங்கள் பற்றி பெ. கணநாதபிள்ளை ...............
★ கற்சிலைகள் பற்றி விஞ்ஞானக் கண்ணோட்டம் ..............
★ சிவராத்திரி தத்துவத்தை விளக்கும் அழகிய மூவர்ண முகப்புச் சித்திரம்.
★ மற்றும் பல ......

உதயன் விற்பனை முகவர்களிடம்
கேட்டு வாங்குங்கள்

[சி-3391]



**NURSES TRAINING**

**தாதி பயிலுனர்க்கான வெற்றிடம்**

தாதி பயிலுனர்க்கான விண்ணப்பங்கள் மானிப்பாய் கிறீன் மெமோறியல் வைத்தியசாலை விவ்வின் பியர்ஸ் தாதியர் கல்லூரிக்கு கேட்கப்படுகின்றன.

இரண்டு தடவைக்கு மேற்படாது G.C.E. [O/L] சாதாரணப் பரீட்சையில் 6 பாடங்களில் சித்தியெய்தி இருப்பதுடன் தமிழ், ஆங்கிலம் கணிதம், விஞ்ஞானம், சுகாதாரம் ஆகியவற்றினுள் 2ல் திறமைச் சித்தி பெற்றிருப்பவர்கள் பங்குனி 15ற்கு முன் விண்ணப்பிக்கவும். வயது: 18 - 22 இற்கு உட்பட்டவர்கள்

விண்ணப்பப் படிவங்கள் வைத்தியசாலை அலுவலகத்தில் பெற்றுக்கொள்ளவும்.

அனுப்ப வேண்டிய முகவரி:

Principal
SCHOOL OF NURSING
Green Memorial Hospital,
Manipay.

(சி-3897)



**அறிவித்தல்**

மீண்டும் முருங்கனில் இருந்து காங்கேசன்துறை சீமெந்து தொழிற்சாலைக்கு களிமண் ஏற்றிக்கொண்டு வந்து இறக்கும் வேலை 22 - 02 - 90 ஆரம்பமாகி உள்ளது என்பதை எமது லொறி வாடிக்கையாளருக்கு அறியத் தருகின்றோம்.

இப்படிக்கு
உருத்திரா ஏஜென்சி,
ஊரெழு.

(11839)



திருமறைக் கலா மன்றம் வழங்கும்

**கலை விழா!**

24 – 02 – 90 சனிக்கிழமை பி. ப. 5 மணிக்கு
★ பொறுத்தது போதும் ★
[நடகம்]

25 – 02 – 90 ஞாயிற்றுக்கிழமை காலை 9 மணிக்கு
★ சித்திரக் கண்காட்சி ★

மாலை 5 மணிக்கு அறிமுகவிழா
★ கலை முகம் ★
[காலாண்டு இதழ்]

26 – 02 – 90 திங்கட்கிழமை மாலை 6.30 மணி
★ நீ ஒரு பாறை ★
[நாட்டுக் கூத்து]

இடம்:- திருமறைக் கலாமன்ற அரங்கு
238, பிரதான வீதி, யாழ்ப்பாணம்.

□ அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம் □

C. நெல்சன்
செயலாளர்
திருமறைக் கலாமன்றம்

[சி 3895]


# மந்திகை ஆஸ்பத்திரி குறைபாடுகள்

# உடன் தீர்த்து வைக்கப்படும்

## தூதுக்குழுவிடம் ஹேரத் உறுதி

யாழ்ப்பாணம், பெப். 23 மந்திகை அரசினர் வைத்தியசாலையில் நிலவும் பற்றாக்குறைகளையும், சீர்கேடுகளையும் உடன் தீர்த்து வைப்பதாக சுகாதார சேவைகள் மகளிர் விவகார அமைச்சர் திருமதி. ரேணுகா ஹேரத் உறுதி அளித்தார்.

இந்த வைத்தியசாலையின் சார்பில் கலந்து கொண்ட தூதுக்குழுவிடமே இந்த உறுதிமொழியை அவர் அளித்தார்.

வைத்தியசாலையின் வைத்திய அதிகாரி டாக்டர் எஸ். கதிரவேலுப்பிள்ளை தலைமையில் அமைச்சரைச் சந்தித்த குழுவில் கே. வி. செல்வராஜன், ஏ. என். எஸ். திருச்செல்வம், ஏ. ஞானச்சந்திரன், வி. ஸ்ரீஸ்கந்தராசா, எஸ். விசாகசுந்தரம் ஆகியோர் இடம் பெற்றனர்.

அமைச்சரின் அலுவலகத்தில் கடந்த 19 ஆம் திகதி நடந்த இந்தப் பேச்சுவார்த்தையில் அமைச்சர் வழங்கிய உறுதி மொழிகள் வருமாறு:

★ புதிய எக்ஸ்ரே இயந்திரம் ஒன்று வழங்கப்படும்.

★ வைத்தியசாலையில் நிலவும் டாக்டர் பற்றாக்குறையை நிவர்த்தி செய்ய இளைப்பாறிய வைத்தியர்களையும், மருத்துவ பீடத்தில் சித்தி அடைந்தவர்களையும் நியமிக்க நடவடிக்கை எடுக்கப்படும்.

★ வைத்திய உத்தியோகஸ்தர்களையும் செஞ்சிலுவைச் சங்க உதவியுடன் நியமித்தல்.

★ வைத்திய நிபுணர்கள் வாரத்தில் ஒரு தடவை விஜயம் செய்வார்கள்.

★ காது, மூக்கு, தொண்டை, தோல் வைத்தியப் பிரிவுகள் ஆரம்பித்தல்,

மற்றும் பல கோரிக்கைகளுக்கும் நடவடிக்கை எடுப்பதாக அமைச்சர் தெரிவித்தார்.

(இ - 3)

**மக்கள் முகம்**

## புலமைப்பரிசில்

யாழ்ப்பாணம், பெப் 23 சாவகச்சேரி மகளிர் மகா வித்தியாலய மாணவிசெல்வி. கந்தையா திருமகள் 1988 ஆகஸ்ட் ஜீ. சி. ஈ. உயர்தரப் பரீட்சைப் பெறுபேற்றின் அடிப்படையில்ஆஸ்தி ரேலிய புலமைப் பரிசில் பெற்றுள்ளார்.

பொருளியல் துறையில் சிறப்புப் பட்டக் கல்வியை



மேற்கொள்ள இவர் கன்பரா தேசிய பல்கலைக்கழகத்தில் அனுமதி பெற்றுள்ளார்.

தமிழ் மொழி மூல கலைத்துறை பரீட்சைப் பெறுபேற்றின் அடிப்படையில் அதிகூடிய 292 புள்ளிகளைப் பெற்று இவர் மட்டுமே இவ் அரிய சந்தர்ப்பத்தை பெற்றுள்ளார் என்பது குறிப்பிடத் தக்கது.

வெளி மாகாணங்களில் இருந்து

# தமிழ் மாவட்டங்களுக்கு நியமனம் பெறும் ஆசிரியர்கள்

யாழ்ப்பாணம், பெப். 23 வெளி மாகாணங்களில் மாவட்ட ரீதியில் நியமனம் பெற்றுச் சேவை புரிந்த பின் தமிழ் மாவட்டங்களுக்கு இடமாற்ற நியமனம் செய்யப்பட்ட ஆசிரியர்களின் பட்டியலை உதயன் தொடர்ந்து வெளியிட்டுள்ளது.

இன்று கிளிநொச்சி, வவுனியா, முல்லைத்தீவு, மன்னார், திருகோணமலை, மட்டக்களப்பு ஆகியவற்றுக்கு இடமாற்ற நியமனம் செய்யப்பட்டவர்களின் விவரத்தைத் தருகிறோம்.

**கிளிநொச்சிக்கு**

திருமதி. எஸ். தமயந்தி (இரத்தினபுரி), செல்வி. எஸ். ராஜேஸ்வரி (குகாவில), திருமதி. எம். தனலக்சுமி (கலெவெல), இ. மாதவன் (அக்ரப்பத்தன),

**வவுனியாவுக்கு**

திருமதி. பீ. ஜெயரத்தினம் (கொழும்பு), கே. சிவநாதன் (புத்தளம்), செல்வி. ஐ. சுந்தையா (விஜிதிபுர)

**முல்லைத்தீவுக்கு**

கே.பி. கணேஷ் (தம்புல்ல), எஸ். வரதராஜன் (நுவரெலியா). சுந்தரமூர்த்தி (மஸ்கெலியா), கே. குணசிங்கம் (றம்பொட), திருமதி. எஸ் ஜெயமலர் (பிளக்பூல்), செல்வி. ஆர். மல்லிகாதேவி (புத்தளம்)

**மன்னாருக்கு**

எஸ். எச். சலாகுதீன் (கொழும்பு), செல்வி. எம். ஏ. எம். பரமநாயகம் (நுகெகொட), திருமதி. எம். எஸ். மப்றுகா (மல்வானை), செல்வி. ரி. வரதலட்சுமி (புசெல்லாவ), சீனியர் எச். டேர்னிக் (பதுளை), எம். அன்ரன் அல்பிரட் (நிக்கடலுபொத்த), செல்வி. என். பாக்கியவதி (நாரம்பல), செல்வி. ஆர். சி. ரம்சியாபேகம் (நக்குலுகம).

**திருகோணமலைக்கு**

திருமதி. எஸ். மொகமத் ஹசின் (மல்வானை), செல்வி. எஸ். கமலா சரோஜினி (பன்வில), செல்வி. ரி. வானதி (புசெல்லாவ), செல்வி. வி. சித்தி சலீமா (கல்ஹின்ன), செல்வி. எம். சுலோசனா தேவி (கலெவெல), திருமதி. ஜே. ஜே. உமாசுதன் (பதுளை), திருமதி. எம். எச். ஜசீமா (குருத்தலாவா), எம். சி. நசூர்தீன் (தெமொதர), செல்வி. ஆர். சிவச்செல்வநாயகி (நிகம்பக).

**மட்டக்களப்புக்கு**

திருமதி. ஜீ. ஜீவரேகா (பதுளை), செல்வி. வி. சத்தியநாதன் (லுணுகல), செல்வி. எஸ். கருணாவதி (திபில), திருமதி. எஸ். ஐ. சாந்தினி (பிபில), எஸ். சிறிதரன் (மாவத்தகம), எம். தயாபரன் (கல்கமுவ), ஏ. எம். இஸ்மாயில் (கொட்டந்தீவு), செல்வி. வி. தனலட்சுமி (இரத்தினபுரி), திருமதி. எஸ். அப்துல் நஜீப் (அவிசாவல), ஏ. எச். எம். சுபியான் (பேருவல), ஆர். திருஞானசம்பந்தன் (அகலவத்த), திருமதி. எம். தேவசிங்கம் (பொகவந்தலாவ), எஸ். பாலசுப்பிரமணியம் (பொகவந்தலாவ), செல்வி. என். டபிள்யூ. ஜெயராஜா (மஸ்கெலியா) பூபாலபிள்ளை இந்திராணி (மஸ்கெலியா).

வடக்கு-கிழக்கு மாகாண சபை:

# 1465 அமைய ஊழியர் நிரந்தரமாக்கப்படுவர்

திருகோணமலை பெப். 23 வடக்கு, கிழக்கு மாகாண அரசில் தற்போது பணிபுரியும் 1465 அமைய ஊழியர்களை நிரந்தரமாக்க மாகாண அமைச்சரவை அங்கீகாரம் வழங்கியுள்ளதாக முதலமைச்சர் திரு. அ. வரதராஜப் பெருமாள் தெரிவித்தார்.

362 எழுதுவினைஞர்களும் 140 தட்டெழுத்தாளர்களும், 12 சுருக்கெழுத்தாளர்களும், 149 சாரதிகளும், 53 அலுவலக உதவியாளர்களும், 251 தொழிலாளர்களும், 4 களஞ்சியக் காப்பாளர்களும், 7 காவலாளிகளும், 15 மொழி பெயர்ப்பாளர்களும், 472 ஏனைய ஊழியர்களும் விரைவில் நிரந்தரமாக்கப்படவுள்ளனர்.

இதேவேளை மாகாண பொதுச் சேவை ஆணைக்குழு ஜனவரி மாதம் 15-ஆம் திகதி முதல் 78 எழுதுவினைஞர்களுக்கும், 125 தட்டெழுத்தாளர்களுக்கும் 16 சுருக்கெழுத்தாளர்களுக்கும் நிரந்தர நியமனம் வழங்கியுள்ளது.

வடக்கு, கிழக்கில் வேலையற்றிருக்கும் அனைத்துப் பொறியியலாளர்களுக்கும், ஏற்கனவே நியமனம் வழங்கப்பட்டுள்ளது. வேலையற்ற அனைத்துப் பட்டதாரிகளுக்கும் எதிர்வரும் மார்ச் மாதம் முதல் நியமனம் வழங்கப்படவுள்ளதாகவும் முதலமைச்சர் தெரிவித்தார்.

ஏற்கனவே நடைபெற்ற நேர்முகப் பரீட்சைக்கு தோற்றத்தவறிய வேலையற்ற பட்டதாரிகள் எதிர்வரும் 25 ஆம் திகதி நடைபெறவுள்ள நேர்முகப் பரீட்சைக்கு தோற்றலாமென்றும் அவர் தெரிவித்தார்.

# வர்த்தகர் சங்கம் இயங்காதிருந்தது

# பெரும் குறையாகும்

## புனரமைப்புக் கூட்டத்தில் உரை

கொடிகாமம், பெப் 23 கடந்த பல காலமாக வர்த்தகர் சங்கம் இயங்காதிருந்தது நாட்டுக்கு ஏற்பட்ட பெரும் குறையாகும். தற்போது இந்த வர்த்தக சங்கத்தைப் புனரமைக்க முன்வந்தது உங்கள் நாட்டுப் பற்றையே காட்டுகிறது.

நாட்டில் இப்போது அமைதி, சமாதானம், பரஸ்பர ஒற்றுமை உருவாகியுள்ளது. இப் பண்புகளை வளர்த்து சகலரிடையேயும் சமாதானத்தை வளர்க்க வேண்டுமென்பதே எங்கள் அபிலாசை.

சில காலம் இயங்காதிருந்த கொடிகாமம் வர்த்தக சங்கத்தை புனரமைக்கச் செய்ய முகமாக கூட்டப்பட்ட கூட்டத்துக்குத் தலைமை வகித்து பேசும் போது தமிழீழ விடுதலைப் புலிகள் மக்கள் முன்னணிப் பொறுப்பாளர் திரு. க. குணம் இப்படிக் கூறினார்.

கொடிகாமம் திருநாவுக்கரசு மகாவித்தியாலயத்தில் நடைபெற்ற இந்த புனரமைப்புக் கூட்டத்தில் வர்த்தகர்கள் அநேகர் கலந்து கொண்டனர்.

திரு. குணம் மேலும் பேசும் போது "வர்த்தகர்கள் நாட்டின் முதுகெலும்புகள். நாட்டைப் போஷிக்க வேண்டியவர்கள் வர்த்தகர்களே" என்றார்.

(இ-75)

## ராமகிருஷ்ண பரமஹம்சர் ஜெயந்தி விழா

பகவான்ஸ்ரீ இராமகிருஷ்ண பரமஹம்சரின் 155 ஆவது ஜெயந்திவிழா 27 ஆம் திகதி செவ்வாய்க்கிழமை திருநெல்வேலி ஆடியபாதம் வீதியில் உள்ள "இராமகிருஷ்ணாலயத்" தில் நடைபெறும்.

மாலையில் கரவைகிழார் "அருட்பிரசாதம்பெற்ற அவதார புருடர்" என்றதலைப்பில் உரை நிகழ்த்துவார்.

(க)


**★ கம்பியூட்டர் கல்வி ★**

★ dBASE III +
Commercial and administration Programming
ஆரம்பம்: 23 Feb 1990 - 10.30
[சனி, ஞாயிறு வகுப்புகள்

★ LOTUS 1 - 2 - 3
Accounting and Statistical Programs
ஆரம்பம்: 23 Feb 1990 - 9.30
[சனி, ஞாயிறு வகுப்புகள்

Join with us to study the Latest Computer Technology

**UNIKCO COMPUTER CENTRE**

No. 5, 2nd Lane
Power House Road, Jaffna.

[சி-3896]


**31ம் நாள் வீட்டுக்கிருத்தியம்**



திரு. சின்னத்தம்பி சண்முகநாதன்
(நெடுந்தீவு)
(இளைப்பாறிய ஓவசியர், அரசினர் வைத்தியசாலை கிளிநொச்சி)

அன்னாரின் ஆத்ம சாந்திக்காக 24-02-90இல் கிளிநொச்சியில் நடைபெறும். இவ்வைபவத்தில் உற்றார், உறவினர், நண்பர்களையும் கலந்து கொள்ளும் படி வேண்டுகிறோம்.

மனைவி மனோன்மணி,
மக்கள், மருமகள், பேரர்.

உதயநகர்,
கிளிநொச்சி.

[11852]

**1ஆம் ஆண்டு நினைவஞ்சலி**



சீனிவாசகம் தணிகாசலம்
(ஆசிரியர்)

உதயம்: 29 – 09 – 1943
சிவபதம்: 06 – 03 – 1989

திதி: 23. 02. 1990

என்றும் எங்கள் இதயத்தில் இருந்து வழிநடத்தும் அன்புத் தெய்வமே! உமது ஆத்ம சாந்திக்காக என்றும் மன்றாடும்.

அன்பு மனைவி,
திருமதி தணிகாசலம்,
மகன்: மயூரன்.

93/9, இராசாவின் தோட்டம்,
யாழ்ப்பாணம்.

(2570)

Digitized by Noolaham Foundation. noolaham.org | aavanaham.org

## காணவில்லை



கோயில் வீதியில் உள்ள 60 ஆம் இலக்க வீட்டில் வதியும் எனது மனைவி வாசுகி அல்லைப்பிட்டி - பராசக்தி பாடசாலையில் கடமையாற்றும் ஆசிரியை, 16-2-90 இலிருந்து காணவில்லை. இவரைப் பற்றிய விபரம் தெரிந்தோர் தயவு செய்து உடனடியாக மேல் காணும் முகவரிக்கு தொடர்பு கொள்ளவும்.

கணவன்: சாள்ஸ்.

No. 60, கோயில் வீதி,
யாழ்ப்பாணம். (2620)



## சர்வமத பிரார்த்தனைக் கூட்டம்

தியானப் பொருள்: இறை ஒருமைத்துவமும் மக்களின் சகோதரத்துவமும்

திகதி: 25- 02- 1990 (ஞாயிறு)
நேரம்: மாலை 4 மணி முதல் 5. 00 மணி வரை
இடம்: இல: 50, 2ஆம் குறுக்குத்தெரு, யாழ்ப்பாணம்.
(கிறிஸ்து ஆலய மண்டபம்)

அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.

அருள் திரு கலாநிதி ஐ. ஹென்றி விக்ரர்
(இயக்குனர்)

மறையகம்: (மறைமக்களிடையே புரிந்துணர்வையும் ஒத்துழைப்பையும் ஏற்படுத்தும் நிலையம்)
(11842)



## Christian Institute For The Study of Religion & Society

The publication 'THE WORD, MEN & MATTERS' in five volumes being a collection of writings of the Rt. Rev. Dr. S. Kulandran formerly Bishop, Jaffna Diocese of the Church of South India will be released at a meeting on Monday the 26th of February 1990 at 3.00 p.m. in the Ottley Hall, Jaffna College, Vaddukoddai by the Rt. Rev. D. J. Ambalavanar, Bishop, JDCSI.

You are cordially invited to be present.

A. Kadirgamar
Acting Director, CISRS

Christa Seva Ashram,
Chunnakam. [C-3900]



சுன்னாகம் பல நோக்குக் கூட்டுறவுச் சங்கம் (வரைவுள்ளது) சுன்னாகம்.

## அறிவித்தல்

சுன்னாகம் பல நோக்குக் கூட்டுறவுச் சங்கத்தில் 6000ற்கு மேற்பட்ட வெற்றுச்சாக்குகள் கேள்விப்பத்திர மூலம் விற்பனைக்கிருக்கின்றன.

வெற்றுச்சாக்குகளுக்கு மீளளிப்பு வைப்புப்பணமாக ரூபா 250/ சங்கத்தில் செலுத்திக் கேள்விப்பத்திரங்களைச் சங்க வேலை நாட்களில் பெற்றுக்கொள்ளலாம்.

28 -02 1990 புதன் கிழமை நண்பகல் 12. 00 மணி வரையும் கேள்விப்பத்திரங்கள் ஏற்றுக்கொள்ளப்படும்.

பொதுமுகாமையாளர்

சுன்னாகம் பல. நோ. கூ. சங்கம்,
சுன்னாகம்,
22- 02- 1990 (சீ/3406)



கட்டிடம் கட்டுதல், தச்சுவேலை, பெயின்றிங், வயறிங் போன்றவற்றிற்கான

## ஒப்பந்தகாரர்

கட்டிடம், தச்சுவேலை, பெயின்றிங், வயரிங், போன்றவற்றிற்கான ஒப்பந்த வேலைகளுக்கு மேற்படி கூட்டுறவு அபிவிருத்திச் சங்கத்துடன் தொடர்பு கொள்ளவும்.

சகல கட்டிட வேலைகள், வீட்டிற்கான தளபாடம் போன்றவை ஒப்பந்த அடிப்படையில் செய்து கொடுக்கப்படும். இவற்றுடன் தொழிலாளர்களும் ஒப்பந்த அடிப்படையில் வேலை செய்வதற்கு வழங்கப்படும்.

மேலதிக விபரங்களுக்கு மேற்படி முகவரியுடன் தொடர்பு கொள்ளவும்.

ஜனசத்தி கட்டிட கூட்டுறவுச் சங்க நிர்வாகி,
ஜனசத்தி கட்டிட கூட்டுறவு அபிவிருத்திச் சங்கம்,
மயிலணி வடக்கு; சுன்னாகம்.
[11855]


★ இந்தியா-பாக். இடையேயான

# காஷ்மீர் தகராறில் மத்தியஸ்தம் செய்ய ஈரான் முன்வந்துள்ளது!

மனாமா, (பஹ்ரைன்) பெப்22

காஷ்மீர் பிரச்சினையில் இந்தியாவுக்கும் பாகிஸ்தானுக்கும் இடையே மத்தியஸ்தம் செய்து வைக்க ஈரான் முன்வந்திருக்கிறது.

இரு நாடுகளுக்கும் இடையேயான காஷ்மீர் தகராறை பேச்சுக்கள் மூலம் தீர்த்து வைக்கத் தேவையான சகல நடவடிக்கைகளையும் எடுக்க ஈரான் தயாராக இருப்பதாக புதுடில்லியில் உள்ள ஈரான் தூதர் அறிவித்திருக்கிறார்.

மூன்றாவது நாடு ஒன்றின் தலையீட்டை காஷ்மீர் பிரச்சினையில் தான் விரும்புவதாக பாகிஸ்தான் பிரதமர் பெனாஸீர் அறிவித்ததற்கும் ஈரான் இப்போது மத்தியஸ்தம் செய்ய முன்வந்ததற்கும் தொடர்பு உண்டா? என்பது பற்றி புதுடில்லி வட்டாரங்கள் பரிசீலனை செய்கின்றன.

ஈரானின் மத்தியஸ்தத்தை இந்தியா ஏற்கும் வாய்ப்பு இல்லை என்றே கருதப்படுகிறது.

ஏற்கனவே மத்தியஸ்தம் செய்து வைக்க சீனா முன்வந்தது. அதனை இந்திய அரசு நிராகரித்து விட்டது.

சிம்லா உடன்பாட்டின் அடிப்படையிலே இரு நாடுகளும் பேசி காஷ்மீர் பிரச்சினைக்குத் தீர்வுகாண வேண்டும் என்பதே இந்திய அரசின் நிலைப்பாடு ஆகும். (எ)

## இஸ்லாமிய தமிழ் இலக்கிய மாநாடு

சென்னை, பெப் 22

அனைத்து இஸ்லாமிய தமிழ் இலக்கிய ஐந்தாவது மாநாடு இராமநாதபுரம் மாவட்டம் கீழக்கரையில் எதிர்வரும் டிசம்பர் மாதத்தில் நடைபெறவிருக்கிறது.

மாநாட்டை ஒட்டி இலக்கிய ஆய்வுகள், சொற்பொழிவுகள், சிறுகதைப் போட்டிகள் ஆகியவை நடைபெறும். (எ)

## தணிக்கை சபையில் ஜெமினி

இந்திய மத்திய திரைப் படத் தணிக்கைச்சபைஉறுப்பினர்களில் ஒருவராக தமிழ் நடிகர் ஜெமினி கணேசனும் நியமிக்கப்பட்டிருக்கிறார்.

திரைப்படத்துறைக் கலைஞர்கள் பிரதிநிதியாக ஜெமினி கணேசனின் நியமனம் அமைகிறது. (எ)

# காஷ்மீர் சட்டசபை கலைப்பு கம்யூனிஸ்ட் கட்சி கண்டனம்

புதுடில்லி, பெப் 22

ஜம்மு - காஷ்மீர் மாநில சட்டசபையைக் கலைத்த நடவடிக்கையை மார்க்ஸிய கம்யூனிஸ்ட் கட்சி வன்மையாகக் கண்டித்துள்ளது.

காஷ்மீர் பிரச்சனைக்கு அரசியல் தீர்வு ஒன்றைக் காண அனைத்துக் கட்சிகள் மாநாட்டைக் கூட்ட வேண்டும். அதனை விடுத்து சட்டசபையைக் கலைப்பது போன்ற நடவடிக்கைகளில் ஜனதா தளம் ஈடுபடுவது பிரச்சினையை வளர்க்கவே உதவும் என்று மார்க்ஸிய கம்யூனிஸ்ட் கட்சிப் பொதுச் செயலாளர் கண்டனம் தெரிவித்தார்.

சட்டசபை கலைப்பும் காஷ்மீர் பிரச்சினைக்கு அரசியல் தீர்வு காணும் நடவடிக்கைகளில் ஒன்று என ஜனதா தள் பேச்சாளர் ஜெய்பால் ரெட்டி சொன்னார். (எ)

## நிக்கரகுவா வேண்டுகோள்

மனாகுவா, பெப் 23

நிபந்தனை இன்றி நிக்கரகுவாவுடனான ராஜரீக உறவை புதுப்பித்துக் கொள்ளும்படி அமெரிக்க அரசுக்கு ஜனாதிபதி டானியல் ஒற்றேகா நேற்று வேண்டுகோள் விடுத்தார்.

நிக்கரகுவாவில் பொதுத் தேர்தல் பிரசாரத்தை முடித்து வைக்கும் கூட்டத்தில் பேசுகையில் ஜனாதிபதி ஒற்றேகா முன்கண்டவாறு தெரிவித்தார். (எ)


## பவுசர் விற்பனை

கரைதுறைப்பற்று ப.நோ. கூ. சங்கத்திற்குச் சொந்தமான 26 ஸ்ரீ 299 இலக்க பவுசர் கேள்விப்பத்திரம் கோரி விற்பனை செய்யப்படவுள்ளது. பவுசரைக் கொள்வனவு செய்யவிரும்புவோர் சங்கத்தால் விநியோகிக்கப்படும் கேள்விப்பத்திரத்தைரூபா 10-செலுத்திப் பெற்று விண்ணப்பித்தல் வேண்டும். அத்துடன் மீளளிக்கப்படும் வைப்புப்பணமாக ரூபா 500/ செலுத்துதல் வேண்டும், பவுசரைப் பார்வையிட விரும்புவோர் சங்க அலுவலக நேரத்தில் பார்வையிடலாம். கேள்விப்பத்திரங்கள் யாவும் தலைவர், கரைதுறைப் பற்று ப. நோ. கூ. சங்கம், முல்லைத்தீவு, என்ற முகவரிக்கு 5- 03- 90க்கு முன்பாக அரக்கு முத்திரையிட்ட கடித உறையின் இடது பக்க மேல் மூலையில் ''பவுசருக்கான கேள்விப்பத்திரம் ''எனக் குறிப்பிட்டு அனுப்புதல் வேண்டும்.

கேள்விப்பத்திரத்தினை ஏற்கும், நிராகரிக்கும் உரிமை சங்க இயக்குநர் சபைக்கு உண்டு. கூடுதலான கேள்விக்காரருக்கே முன்னுரிமை வழங்கப்படும். கேள்விப் பத்திரங்கள் 5. 03. 90 பிற்பகல் 2. 00 மணிக்குத் திறக்கப்படும்.

பொது முகாமையாளர்
கரைதுறைப்பற்று ப. நோ. கூ. சங்கம்.

முல்லைத்தீவு,
19. 02. 90 (சீ/3405)



# RUSH!

For Quickest Delivery of Your Documents, Letters, Parcels Etc to Any Country, Any Time

DHL WORLDWIDE EXPRESS®

337, KASTHURIAR ROAD, JAFFNA. [C-3399]


## பதினான்கு வயதினிலே தங்கக் கடத்தல்

புதுடில்லி, பெப் 23

45 லட்சம் ரூபா பெறுமதியான ஆறுகிலோ தங்கக் கட்டிகளைக் கடத்தி வந்ததாக பிரான்ஸ் நாட்டைச் சேர்ந்த பாடசாலை மாணவி ஒருவர் பம்பாயில் பிடிக்கப்பட்டார்.

கிம்லி ஸ்சின்ட்றொன் என்ற பெயருடைய இம் மாணவி தனது இடுப்பில் கட்டியிருந்த பெல்ட்டில் 6 கிலோ தங்கத்தை மறைத்து வைத்திருந்தது சோதனையில் தெரிய வந்தது.

ஒவ்வொன்றும் 10 தோலா எடையுள்ள 50 தங்கபிஸ்கட்டுக்களை பெல்டில் அடைத்திருந்தார் கிம்லியின்.

★ இந்தியாவில்

# சர்வதேச விமான நிலையம் அருகில் மருத்துவ மனைகள்

## பெங்களூர் விபத்தைத் தொடர்ந்து சிபாரிசு!

புதுடில்லி: பெப். 22

பெங்களூரில் சமீபத்தில் நடைபெற்ற எயர்பஸ் விமான விபத்தைத் தொடர்ந்து சர்வதேச விமான நிலைய ஆணையகத்தின் இந்தியப் பிரிவின் விசேட கூட்டம் ஒன்று எதிர்வரும் திங்கட்கிழமை சென்னையில் நடைபெற உள்ளது.

இத்தகைய விமான விபத்துக்கள் ஏற்படாமல் இருக்க என்ன என்ன தடுப்பு நடவடிக்கைகளை மேற்கொள்ளலாம் என்பது பற்றி இந்தக் கூட்டத்தில் விரிவாக விவாதிக்கப்படவுள்ளது.

இந்தக் கூட்டத்திலே கலந்து கொள்ளும் உறுப்பினர்கள் சென்னை மீனம்பாக்கம் உள்நாட்டு, வெளிநாட்டு விமானக்கூடங்களைப் பார்வையிடுவர்.

இந்தியாவில் உள்ள ஒவ்வொரு சர்வதேச விமான நிலையம் அருகிலும் 200 படுக்கை வசதிகள் கொண்ட நவீன மருத்துவ மனைகள், சக்தி வாய்ந்த கருவிகளைக் கொண்ட தீயணைப்புப் படை, மற்றும் அம்புலன்ஸ் வசதிகள் கட்டாயம் இடம் பெறச் செய்ய வேண்டும் என்று இக்கூட்டத்தில் தீர்மானிக்கப்பட இருக்கிறது. (எ)

# மணிப்பூரில் மாநில அரசாங்கம் அமைப்பதில் இழுபறிநிலைமை!

மணிப்பூர் மாநிலத்தில் புதிய அரசாங்கத்தை எந்தக் கட்சி அமைப்பது என்பதில் இழுபறி நிலை ஏற்பட்டுள்ளது.

60 ஆசனங்களுக்கான சட்டசபையில் 58 தொகுதிகளின் தேர்தல் முடிவுகள் வெளியாகி விட்டன.

26 ஆசனங்களைப் பெற்று தனிக்கட்சியாக இந்திரா காங்கிரஸ் விளங்குகிறது.

ஆறு எதிர்க்கட்சிகள் சேர்ந்து அமைந்தஐக்கிய முன்னணிக்கு 32 ஆசனங்கள் கிடைத்தன.

ஐக்கிய முன்னணியில் உள்ள கட்சிகளுக்கு கிடைத்த ஆசனங்களின் எண்ணிக்கை வருமாறு;

ஜனதா தளம்- 10, மணிப்பூர், மக்கள் கட்சி- 10, இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சி- 3, காங்கிரஸ்- எஸ்- 6, தேசிய பேரவை- 2, தேசிய மக்கள் கட்சி- 1 - மொத்தம் 36 ஆசனங்கள்.

தனிப் பெரும்பான்மை ஆசனங்களைக் கொண்டிருப்பதால் ஆட்சி அமைக்கும் உரிமை தங்களுக்கே தரப்பட வேண்டும் என்று இந்திரா காங்கிரஸ் கோரியிருக்கிறது.

அறுதிப் பெரும்பான்மை பெற்றுள்ள ஐக்கிய முன்னணிக்கே ஆட்சி அமைக்கும் உரிமை வழங்கப்பட வேண்டும் என்று ஜனதாதளம் கோரியுள்ளது.

காங்கிரஸல்லாத எதிர்க் கட்சிகள் முன்னணி ஆட்சி அமைக்க உதவும்படி அமைச்சர் உபபேந்திராவை பிரதமர் வி. பி. சிங் கேட்டிருக்கிறார்.

## மண்டபம் . . .

(1ஆம் பக்கத் தொடர்ச்சி)

முக்கு வெளியே செல்ல எவராவது விரும்பினால் அகதி முகாமுக்கு பொறுப்பாக உள்ள அதிகாரியான உதவி கலெக்டரிடம் அனுமதி பெற வேண்டும்.

அகதி முகாமுக்கு அருகே சந்தேகப்படும்படியாக நடமாடும் எவர் மீதும் இனி உடனடியாக நடவடிக்கை எடுக்கப்படும்.

இதற்கான உத்தரவை அகதி முகாமின் உதவி கலெக்டர் லோறன்ஸ் பிறப்பித்திருக்கின்றார் (உ- எ-9)

## வரதருக்கு . . .

(1ஆம் பக்கத் தொடர்ச்சி)

விலகிக்கொண்டதும் ஈ. பி. ஆர். எல். எவ் வின் மாகாண அரசு கவிழ்ந்துவிடும் என தமிழக முதல்வர் உட்படபலர் கருத்துத் தெரிவித்து வருகின்றனர். இந்த நிலையில் அவர்களது கருத்துப்படி எப்படியும் மார்ச் 31 ஆம் திகதிக்குப் பின்னர் மாகாண சபை அரசு கவிழத்தான் போகிறது. பிறகு எதற்காக எமது அரசு பதவி விலக வேண்டும்என அவர்கள் வலியுறுத்துகிறார்கள்'' என்று அவ்வட்டாரம் கேள்வி எழுப்பின. (உ-9)

## கஜராஜ் . . .

பேற்று வருவதாகவும் மற்றொரு செய்தி தெரிவித்தது.

தினசரி பலாலியில் வந்து இறங்கிப் போகும் ''கஜராஜ்'' - ஏ - 76 விமானத்தினுள் ஹெலிக்கொப்டர்களும் ஏற்றப்பட்டு, அவையும் விமானம் மூலமாகவே அனுப்பப் படுவதாகத் தெரியவந்தது.

பலாலியில் நிலைகொண்டிருக்கும் படையினர் அனேகமாக மார்ச் 15ஆம் திகதியளவில் அங்கிருந்து முற்றாக வெளியேறுவர் எனத் தெரிவிக்கப்பட்டது. (உ-9)

## ஆயுத ஒப்படை ...

1ஆம் பக்கத் தொடர்ச்சி)

திரு. ரஞ்சன் விஜேரத்னா உத்தரவு பிறப்பித்தார்.

அப்படி ஒப்படைக்காதவர்களை பாதுகாப்புப் படை தேடிக் கண்டுபிடித்து கைது செய்யும் என்றும் சட்டப்படி அவர்கள் தண்டிக்கப் படுவர் என்றும் அமைச்சர் கூறினார்.

இந்த உத்தரவு விடுதலைப் புலிகள் இயக்கத்துக்கும் பொருந்தும் என்றும் அமைச்சர் கொழும்பில் தெரிவித்திருக்கிறார்.

## ஈழத் தமிழ் . . .

(1ஆம் பக்கத் தொடர்ச்சி)

'மீண்டும் தேர்தல் நடத்துவதால் மோதல் ஏற்பட்டு வன்செயல்கள் அதிகரிக்கும். இதைத் தவிர்க்க நீங்கள் (கருணாநிதி) குறிப்பிடும் எண்ணிக்கையில் அதிகப்பிரதிநிதித்துவத்தை மாகாணசபையில் கொடுக்கத் தயார்' என்று என்னிடம் தெரிவித்தனர்.

இவர்களின் கருத்தை விடுதலைப் புலிகள் ஏற்கவில்லை. தேர்தல் நடத்தியே ஆக வேண்டும் என்று விடுதலைப் புலிகள் வற்புறுத்தினர்.

இதனால் ஏற்பட்டுள்ள சிக்கலை அமைச்சர் முரசொலிமாறன் மத்திய அரசிடம் தெரிவித்து விட்டார்.

பொதுவாக விடுதலைப் புலிகளின் கருத்துக்களை ஈ. பி. ஆர். எல். எவ்., ஈ. என். டி. எல். எவ். குழுக்களைத் தவிர இதர அனைத்துப் போராளிக் குழுவினரும் கொள்கையளவில் ஏற்றுக் கொண்டனர். ஆனால் நடைமுறையில் அவற்றைச் செயற்படுத்துவதில் அவர்களது கருத்துக்களை அறிந்து சில சிக்கல்களைத் தீர்க்க வேண்டியிருக்கிறது.

இருதரப்பினரும் தங்கள் தங்கள்நிலைகளை வலியுறுத்திய நிலையில்இன்னும் கொஞ்சம் அவகாசம் கேட்டிருக்கின்றனர்.

மக்களிடம் தங்களுக்கு ஆதரவு இருக்கிறது என்பதை நிலைநிறுத்தத் தேர்தல்தான் தேவை என்று விடுதலைப் புலிகள் இயக்கம் கூறுகிறது. இல்லை என்றால் இப்படிப் பட்ட பதவிகளுக்காக இயக்கத்தைத் தாங்கள் நடத்தி வந்ததாக மக்கள் பழிசொல்லக்கூடும் என்றும் விடுதலைப் புலிகள் கருத்துத் தெரிவித்துள்ளது.

தேர்தலைப் புதிதாக நடத்தும் பட்சத்தில் சகோதர இயக்கங்களுக்கு இடையே மோதல் ஏற்பட்டு வன்முறைச் சம்பவங்கள் ஏற்படலாம் என்று ஈ. பி. ஆர். எல். எவ். கருதுகிறது.

வடக்கு — கிழக்கு மாகாண சபைக்கலைப்புச் சம்பந்தமாக முடிவுஎடுக்க அவகாசம் தேவை என்று அந்த இயக்கம் வலியுறுத்தி இருக்கிறது.

இம்மாதம் 25ஆம் திகதிக்குப்பிறகு அவர்கள் என்னை மீண்டும் சந்திக்கக்கூடும்.

இதேவேளை எந்தக் குழுவினர்மீதும்முதலமைச்சர் என்ற முறையில் தீர்வுகாணும் வழிமுறைகள் எதையும் நான் திணிக்கவில்லை என்பதைக் குறிப்பிட விரும்புகிறேன் — என்றார் கலைஞர். (உஎ)

## செக். அரசியலில் களையெடுப்பு

பிராக் பெப் 21

செக்கோஸ்லேவேகிய முன்னாள் ஜனாதிபதி குஸ்டாவ் ஹீஸாக் கம்யூனிஸ்ட் கட்சியில் இருந்து வெளியேற்றப் பட்டார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அண்ணா கோப்பியின்

வெற்றுப் பைக்கட்டுகளைச் சேகரித்து கீழ்காணும் பரிசுகளைப் பெற்றுக்கொள்ளுங்கள்.

100g வெற்றுப் பைக்கட்டுகள் 10 க்கு
அல்லது
50g வெற்றுப் பைக்கட்டுகள் 20 க்கு
அல்லது
25g வெற்றுப் பைக்கட்டுகள் 40 க்கு

ஒரு எவர்சில்வர் ரம்ளர்


# உதயன்

23 - 02 - 1990 வெள்ளிக்கிழமை


அண்ணா கோப்பி, மல்லித்தூள்,
மல்லிக் கோப்பி, மா வகைகள்,
ஜீவாகாரம், மிளகாய்த்தூள்
ஆகியவற்றை மலிவு விலையில்
பெற்றுக்கொள்ளலாம்.

அண்ணா கோப்பி,
விளம்பர நிலையம்.

### பத்திரிகையாளர் கொலைச் சம்பவம்

## 'றோ' மீதான குற்றச்சாட்டு; இந்தியத் தூதரகம் மறுப்பு

கொழும்பு, பெப். 23

இலங்கைப் பத்திரிகையாளர் ரிச்சர்ட் டி சொய்சா கடத்தப்பட்டு, பின்னர் கொலை செய்யப்பட்டதற்கு 'றோ' என்ற இந்தியப் புலனாய்வுத் துறைக்கு தொடர்பிருக்கலாம் என்று தகவல்துறை துணை அமைச்சர் ஏ. ஜே. ரணசிங்கா கூறிய புகாரை கொழும்பில் உள்ள இந்தியத் தூதரகம் மறுத்துள்ளது.

முக்கியமான அரசியல்வாதி ஒருவரிடமிருந்து இப்படியான குற்றச்சாட்டு கிளம்பியது அதிர்ச்சி அளிப்பதாக உள்ளதாக இந்தியத் தூதரகம் விடுத்த அறிக்கை ஒன்றில் கூறப்பட்டு இருக்கிறது. (உ-எ-9)

## துணை அமைச்சர் ரணசிங்க வருத்தம் தெரிவிக்கிறார்

கொழும்பு, பெப். 23

பத்திரிகையாளர் ரிச்சர்ட் டி சொய்ஸா கொல்லப்பட்டதற்கு இந்தியாவின் 'றோ' உளவு நிறுவனம்தான் காரணம் என்று தான் கூறியதாக வெளிவந்த செய்திக்கு தகவல் துறை துணை அமைச்சர் ஏ. ஜே. ரணசிங்க வருத்தம் தெரிவித்தார்.

''எனது பேச்சு குறித்து தவறான கருத்து ஏற்பட்டுவிட்டது. இந்திய உளவு நிறுவனமான 'றோ' பிரிவு இக் கொலைக்குக் காரணம் என்று நான் ஒருபோதும் கூறியதில்லை.

''இத் தப்பபிப்பிராயம் குறித்து நான் வருத்தமடைகின்றேன். இந்தியா மீது எந்தக் குற்றச்சாட்டையும் நான் தெரிவிக்கவில்லை.

''அடுத்த 2 வாரங்களுக்கு கவனமாக இருக்க வேண்டும் என்று மட்டுமே எனது துறையினருக்குத் தெரிவித்திருந்தேன்'' என்று திரு. ரணசிங்கா செய்தியாளர்களிடம் நேற்றுத் தெரிவித்தார். (ஒ-எ)

## தீவுப்பகுதிக்கு சேவையாற்ற அம்புலன்ஸ் படகு தருக!

### ஐ. நா. அதிகாரிகளிடம் கோரிக்கை

யாழ்ப்பாணம், பெப். 23

தீவுப்பகுதி மக்களின் நன்மை கருதி அம்புலன்ஸ் படகு ஒன்றை தந்துதவுமாறு ஐ.நா. அதிகாரிகளிடம் யாழ். அரச அதிபர் திரு. கா. மாணிக்கவாசகர் வேண்டுகோள் விடுத்தார்.

நேற்று யாழ்அரசாங்க செயலகத்துக்கு விஜயம் செய்த ஐ. நா. அதிகாரிகள் அரச அதிபருடன் பேச்சு நடாத்தினார்கள்.

கீழ்க்கண்ட கோரிக்கைகள் விடுக்கப்பட்டன.

★ தீவுப்பகுதியில் உள்ள வைத்தியசாலைகளில் இருக்கும் நோயாளர்கள் அவசர சிகிச்சைக்கு யாழ். போதனா வைத்தியசாலைக்கு எடுத்துவர அம்புலன்ஸ் படகு இல்லை. அந்தப்படகை வழங்கி உதவ வேண்டும்.

★ யாழ். மாவட்டத்தில் உள்ள பொதுக் கிணறுகளை ஆழமாக்கி சுத்தம் செய்ய வேண்டும். (இ-3-10)

## யாழ். செயலக ஊழியருக்கு விசேட பஸ் சேவை வசதி!

யாழ்ப்பாணம், பெப் 23

யாழ். செயலக ஊழியர்களின் போக்குவரத்து வசதியை கருத்திற்கொண்டு வட பிராந்திய போக்குவரத்துச் சபை விசேடபஸ்சேவைகளை மார்ச் முதலாம் திகதி முதல் நடத்தவுள்ளது.

இது தொடர்பான கலந்துரையாடல் ஒன்று நேற்று யாழ். செயலத்தில் நடைபெற்றது.

வட பிராந்திய போக்குவரத்துச் சபையின் கோண்டாவில், காரைநகர், பருத்தித்துறை டிப்போக்களிலிருந்து மூன்று உயரதிகாரிகளும், செயலக அதிகாரிகளும் இந்தக் கலந்துரையாடலில் பங்குபற்றினர். கலந்துரையாடலின் போது விசேட பஸ் சேவை ஏற்பாடுகள் பற்றி முடிவாகியது. அந்த முடிவுகள் வருமாறு:

★ பருத்தித்துறை சாலையின் 751, பாதைச் சேவையை காலை 6. 55 க்கும் 750, பாதைச் சேவையை காலை 7. 30 மணிக்கும் பருத்தித்துறை பஸ்நிலையத்திலிருந்து ஆரம்பிக்கும்.

★ கோண்டாவில் சாலை காங்கேசன்துறையில் இருந்து 769 பாதைச் சேவையை காலை 7. 30 மணிக்கு ஆரம்பிக்கும். மற்றொரு சேவை பாலாலியில் இருந்து காலை 7. 00 மணிக்கு ஆரம்பமாகும்.

★ காரைநகர் சாலை 785 பாதைச் சேவையை காலை 7. 00 மணிக்கு காரைநகர் பஸ் நிலையத்தில் இருந்து ஆரம்பிக்கும்.

இந்த பஸ்கள் அனைத்தும் யாழ். செயலகம் வரை சேவையில் ஈடுபடும்.

செயலக ஊழியர்கள் கடமை முடிந்து வீடு திரும்புவதற்காக மாலை 4. 20 மணிக்கு யாழ். செயலகத்தில் இருந்து யாழ். பஸ் நிலையம் வரை பஸ்சேவைகள் நடத்தப்படும். (ஒ 3-10)

## பயிலுநர் ஆசிரியர் தெரிவு; முதற் பட்டியல் பார்வைக்கு!

யாழ்ப்பாணம், பெப் 23

யாழ். மாவட்டத்தில் பயிலுனர் ஆசிரியர் பதவிக்குத் தெரிவாக இருப்போரின் முதற்கட்டப் பட்டியல் நேற்று வெளியிடப்பட்டது.

இப்பட்டியல் உதவிஅரசாங்க அதிபர் பிரிவு அலுவலகங்களிலும், கோட்டக்கல்வி அலுவலகங்களிலும் இன்று முதல் பார்வைக்கு வைக்கப்படும் என யாழ். கல்வித் திணைக்களம் அறிவித்துள்ளது.

தெரிவு செய்யப்பட்டோர் தொடர்பான மேன்முறையீடுகள் ஏற்றுக்கொள்ளப்பட்டு பரிசீலிக்கப்படும். அதன் பின்னர் தெரிவுசெய்யப்படுவோரின் இறுதிப் பட்டியல் வெளியிடப்பட்டு அவர்களுக்கு நியமனங்கள் வழங்கப்படும். (ஒ-10-69)

இப்பத்திரிகை நியூ உதயன் பப்ளிக்கேஷன் (பிறைவேட்) லிமிட்டெட்டினால் யாழ்ப்பாணம், நாவலர் வீதி, 292/2 இலக்கத்தில் உள்ள அச்சகத்தில் 23 - 02 - 1990 இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது.

### ஈழத் தமிழர் பிரச்சினைக்குத் தீர்வு காண

# அனைத்துக்கட்சி ஆலோசனை; இல்லையேல் போராட்டம்!

### கலைஞருக்கு தமிழக எம். பி. மிரட்டல்

சென்னை பெப் 23

இலங்கைத் தமிழர் பிரச்சினைக்கு தீர்வு காண அனைத்துக்கட்சியினருடனும் கலந்தாலோசிக்க முதலமைச்சர் கருணாநிதி மறுத்தால் இலங்கைத் தமிழர்களின் நலன்களைக் காக்க நாம் போராட்டம் நடத்தவேண்டியிருக்கும்.

இந்திய ஐக்கிய பொதுவுடமைக் கட்சியின் தமிழ் மாநிலச் செயலாளரும் எம். பியுமான திரு. தா. பாண்டியன் முன்கண்டவாறு அறிவித்தார்.

திரு. பாண்டியன் இது சம்பந்தமான அறிக்கையில் மேலும் தெரிவித்து இருப்பதாவது;

இலங்கைத் தமிழர் பிரச்சினையில் எந்த அமைப்பையும் சாராமல் நடு நிலையுடன் முதல்வர் கருணாநிதி செயல்பட வேண்டும்.

கருணாநிதி அவரது கட்சியின் விருப்பங்களை இலங்கைத் தமிழ்ப் போராளிக் குழுக்கள் மீது திணிக்காமல் இலங்கைத் தமிழர்களின் நலன் காப்பதற்கான வழிவகைகளை அனைத்துக் கட்சியினரையும் அழைத்துக் கலந்து ஆலோசித்து முடிவு செய்ய வேண்டும்.

நடுநிலையில் நின்று பொதுவான தலைமையை ஏற்க வேண்டிய முதல்வரின் நடவடிக்கையிலும் பேச்சிலும் ஒரு குழுவின் சார்பில் வாதாடுகிற தொனி இருப்பதை வேதனையுடன்சுட்டிக்காட்ட வேண்டியிருக்கிறது.

இப்படி அறிக்கையில் கூறப்பட்டிருக்கின்றது.

## அமிர் கொலை தொடர்பாக ஐ. ஜி. பி. வெளியிட்ட தகவல்

கொழும்பு, பெப். 23

தமிழர் விடுதலைக் கூட்டணிச் செயலதிபர் அமிர்தலிங்கத்தின் கொலை சம்பந்தமான கேள்வி ஒன்றுக்குப் பொலீஸ் மா அதிபர் ஏர்னஸ்ட் பெரேரா நேற்றுநடைபெற்ற செய்தியாளர் மாநாட்டில் பதிலளித்தார்.

அவர் சொன்னதாவது;

தற்சமயம் தடுப்புக்காவலில் வைக்கப்பட்டு உள்ள மரியதாஸ் என்பவர் அளித்த வாக்குமூலத்தில் இருந்து திரு. அமிர்தலிங்கத்தைக் கொலை செய்வதற்குச் சதித் திட்டம் ஒன்று உருவாக்கப்பட்டது தெரியவந்திருக்கிறது,

சதி முயற்சியில் ஈடுபட்ட இருவர் கொல்லப்பட்டுவிட்டனர். வைத்திய பரிசோதனை அறிக்கை சமர்ப்பிக்கப்பட்டுவிட்டது.

தான் ஒரு விடுதலைப் புலிகள் இயக்கஅங்கத்தவர் என்று மரியதாஸ் கூறியுள்ளார்.

— இப்படி பொலீஸ் மா அதிபர் பத்திரிகையாளர் மாநாட்டில் சொன்னார். (ஒ-எ)

## நூல் வெளியீடு

யாழ்ப்பாணம், பெப் 23

திரு. த. சத்தியதாஸன் எழுதிய சனி மாற்றமும், பகவான் ஸ்ரீ சத்தியசாயிபாபாவின் மறு அவதாரமாகிய பிரேம சாயி பாபாவின் அவதார அற்புதங்களும் அடங்கிய நூல் வெளியீட்டு வைபவம், நாளை சனிக்கிழமை காலை 11. 30 மணியளவில், கீரிமலை யோக சுவாமிகள் மகளிர் தவ நிலையத்தில் நடைபெறுகிறது. (ஒ)

### அவசரகாலச்சட்ட நீடிப்பு விவாதம்:

## ஆட்கடத்தல், கொலைகள் இன்னும் தொடர்கின்றன

### சபையில் சிறிமா குற்றச்சாட்டு

கொழும்பு, பெப். 23

அவசரகாலச் சட்டத்தில் சில பிரமாணங்கள் நீக்கப்பட்டுவிட்டன. என்றாலும் ஆட்கடத்தல், படுகொலைகள் ஆகியவை இன்னும் தொடர்கின்றன.

அவசரகாலச் சட்டத்தை நீடிக்கும் பிரேரணை மீதான விவாதத்தில் நேற்று எதிர்க் கட்சித்தலைவி திருமதி சிறிமாவோ பண்டாரநாயக்கா பேசும்போது இவ்வாறு கூறினார்.

அவர் மேலும் பேசுகையில் கூறியதாவது;

ஆட்கடத்தல் படுகொலைகள் ஆகியவை இன்னும் முடிவுக்கு வரவில்லை. இவை நாளாந்த நடவடிக்கைகளாகிவிட்டன.

எவ்வளவு காலத்துக்குஇந்த நிலை நீடிக்கப்போகிறதோ தெரியவில்லை.

இந்த அக்கிரமங்களை முடிவுக்குக் கொண்டுவர அரசு ஏன் அவசர நடவடிக்கைகளை மேற்கொள்ளவில்லை?

பத்திரிகையாளர் மற்றும் கலைஞர்கள் சுதந்திரமாக வாழும்நிலை நாட்டில் இன்று இல்லை—என்று அவர் சொன்னார். (ஒ-எ)

## கிளிநொச்சியில் முகாமைத்துவ பயிற்சி

யாழ்ப்பாணம், பெப். 23

கிளிநொச்சி மாவட்டத்தில் 15 பட்டதாரிகள் முகாமைத்துவ பயிற்சியாளர்களாக நியமிக்கப்பட்டுள்ளனர்.

அம் மாவட்டத்தில் ஏற்பட்டுள்ள ஊழியர் தட்டுப்பாட்டை இந்த நியமனம் ஓரளவு நீக்கும் என எதிர்பார்க்கப்படுகிறது.

இவர்கள் பல்வேறு திணைக்களங்களிலும் பயிற்சி பெறுவார்கள். (இ-3-10)

### 1954க்குப் பின் பிறந்தோருக்கு

## பிறப்புச் சான்றிதழ் வழங்கும் வேலை நிறுத்தம்

யாழ்ப்பாணம், பெப். 23

1954ஆம் ஆண்டுக்குப் பின் பிறந்தவர்களுக்குப் பிறப்புச் சான்றிதழ் வழங்கும் வேலைகள் நிறுத்தப்பட்டுள்ளன என்று செயலக வட்டாரங்கள் தெரிவித்தன.

1954ஆம் ஆண்டுக்குப் பின் பிறந்தவர்களுக்கு இருபக்கம் உள்ள பிறப்பு அத்தாட்சிப் பத்திரமே பதியப்பட்டுள்ளது.

ஆனால் இந்த இருபக்கம் உள்ள பதிவுகளை வழங்க புத்தகம் இல்லாததால் வேலைகள் நிறுத்தப்பட்டுள்ளன.

அதேநேரம் 1954ஆம் ஆண்டுக்கு முன் பிறந்தவர்களின் பிறப்புச் சான்றிதழ்கள் வழங்கப்பட்டு வருகின்றன.

அலுவலக போட்டோஸ்ரட் இயந்திரம் கடந்த இருவாரமாகப் பழுதடைந்திருந்தபோதும் மற்றைய வேலைகள் நடைபெறுவதாகத் தெரிவிக்கப்பட்டது. (இ-10-3)

## கருத்தரங்கு

கொழும்புத்துறை, பெப் 23

யாழ். மாவட்ட சிக்கன கடன் வழங்கு கூட்டுறவுச் சங்கங்களின் சமாசத்தின் யாழ். உதவி அரசாங்க அதிபர் பிரிவு பிராந்திய சபைக் கருத்தரங்கு இன்றுவெள்ளிக்கிழமை காலை 9-30மணிக்கு யாழ் சன்மார்க்க வித்தியாலயத்தில் பிராந்திய சபைத் தலைவர் திரு. செ, கந்தசாமி தலைமையில் நடைபெறும். (க-30)

## சைக்கிளோட்டம்

யாழ்-பெரியபுலம் மகாவித்தியாலய மாணவ மாணவிகளின் வீதி ஓட்டம், சைக்கிள் ஓட்டம் என்பன இன்று வெள்ளிக்கிழமை காலை 6 மணிக்கு நடைபெறும்.

வித்தியாலய அதிபர் திரு. க. கனகசிங்கம் நிகழ்ச்சிகளை தலைமை வகித்து ஆரம்பித்து வைப்பார்.

ஐந்து கிலோ மீட்டர் தூரத்தை மாணவர்கள் மரதன் முறையிலும், மாணவிகள் சைக்கிள்களிலும் ஓடி முடிப்பர் என்று தெரிவிக்கப்படுகிறது. (இ-51)

### தீவுப்பகுதியில் சேவையாற்ற

## மாத இறுதியில் ஒரு படகு வந்து சேருகிறது!

100 பயணிகள் செல்லத்தக்க படகு ஒன்று தீவுப்பகுதிச் சேவைக்காக இம்மாத இறுதியில் வந்துசேர இருக்கிறது.

புனர்வாழ்வு அமைச்சின் நிதியிலிருந்து குறிகாட்டுவானில் இருந்து சேவையில் ஈடுபட இரண்டு படகுகள் வாங்கத் திட்டமிடப்பட்டிருந்தது.

இந்தப் படகுகளில் ஒன்றே இம்மாத இறுதியில் இங்கு வந்து சேருமெனத் தெரிவிக்கப்படுகிறது. மற்றைய படகு [illegible] சேருமெனத் தெரிவிக்கப்படுகிறது.

இப்படகுகள் கொழும்பு டொக்யாட் நிறுவனத்தில் உற்பத்தி செய்யப்பட்டவை ஆகும். (இ-3-10)

## சீன அமைச்சரின் இந்திய விஜயம்

புதுடில்லி, பெப் 23

சீன வெளியுறவு அமைச்சர் கியான் கியாச்சென் இரண்டு நாள்விஜயம்ஒன்றை மேற்கொண்டு அடுத்தமாதம் [illegible]ஆம் திகதி புதுடில்லிக்கு செல்கிறார்.

## 75 பேர் நேற்று விடுவிப்பு! எஞ்சியோர் இன்று விடுதலை

யாழ்ப்பாணம், பெப் 23

தமிழீழ விடுதலைப் புலிகள் இயக்கத்தின் முக்கிய பிரமுகர்கள் சிலர் உட்பட காங்கேசன்துறை தடுப்புமுகாமில் தடுத்து வைக்கப்பட்டிருந்த சுமார் 75 இளைஞர்கள் நேற்று உடுப்பிட்டி இந்தியப் படை முகாமில் வைத்து விடுவிக்கப்பட்டனர்.

காங்கேசன் தடுப்பு முகாமில் வைக்கப்பட்டிருக்கும் எஞ்சிய இளைஞர்கள் இன்று விடுவிக்கப்படுவர் எனத் தெரிவிக்கப்பட்டது. (உ-9)

## கல்வித் திணைக்களத்துக்கு உபகரணங்கள் அன்பளிப்பு

யாழ்ப்பாணம், பெப். 23

யாழ் கல்வித் திணைக்கள முறைசாராக் கல்விப் பிரிவுகளுக்குத் தேவையான உபகரணங்கள் மற்றும் கருவிகளை வழங்கும் வைபவம் ஒன்று நேற்று மாலை யாழ் கல்வித் திணைக்களத்தில் நடைபெற்றது.

இந்த வைபவத்தில் அகதிகளுக்கான ஐக்கிய நாடுகள் உயர்ஸ்தானிகர் கொழும்பு அலுவலகத்தின் சிரேஷ்ட செயல்திட்ட அதிகாரி திரு. டி. எல். பவுரிஸ்ரா கலந்துகொண்டு கருவிகளையும் உபகரணங்களையும் வழங்கினார்.

இந்த நிகழ்ச்சியில் ஜெனிவா தலைமையக மற்றும் கொழும்பு, யாழ்ப்பாணம் அ.ஐ.நா. உ. ஸ்தானிகராலய அலுவலகப் பிரதிநிதிகளும் கலந்துகொண்டனர். (ஒ-3-10)

## மரண அறிவித்தல்கள்

### செல்வி லதா அருணாசலம்

யாழ்ப்பாணம் அத்தியடியைச் சேர்ந்த செல்வி லதா அருணாசலம் காலமாகிவிட்டார். இவர் அருணாசலம் (France), பத்மநிதி தம்பதிகளின் சிரேஷ்ட புதல்வியும் நிரஞ்சன் (கனடா), தனஞ்சன், சுஜதா ஆகியோரின் அருமைச் சகோதரியும், காலஞ்சென்ற கந்தையா, பூரணம், காலஞ்சென்ற கனகசபை, மனோன்மணி ஆகியோரின் அருமைப் பேத்தியுமாவார். அன்னாரின் ஈமக்கிரியைகள் சனிக்கிழமை 24 - 2 - 90 காலை 9 மணியளவில் அன்னாரின் இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைகளுக்காக கோம்பயன் மணல்மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும். இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:
க. பத்மநாதன்,
55/4, அம்பலவாணர் வீதி,
அத்தியடி,
யாழ்ப்பாணம். (11903)

### திரு. தம்பிராசா - சுந்தரராசா

(Former Deputy Director Finance General Treasury Presently Finance Adviser Ministry of Finance Liberia)

19-02-90இல் கனடாவில் காலமானார். அன்னார் காலஞ்சென்ற திரு. திருமதி தம்பிராசா அவர்களின் சிரேஷ்ட புதல்வனும் திருமதி மடுமலர் கருணானந்தன், அன்ரன் ராஜசெல்வன் ஆகியோரின் அன்புத்தந்தையும் திருமதி கிறேஸ்தவமணி சுப்பிரமணியம் (கனடா) காலஞ்சென்ற திருமதி மனோன்மணி அருள்பிரகாசம், Dr. T. சிங்கராசா (தம்பிராசா ஞாபகார்த்த வைத்தியசாலை) திருமதி பொன்மணி செல்வராசா, துரைராசா, இரத்தினராசா (G.S.O. சாவகச்சேரி நகரம்), அரியகுலராசா, திருமதி கிறிஸ்டமெல் செல்வநாயகம் (அவுஸ்திரேலியா) ஆகியோரின் அன்புச்சகோதரனும், காலஞ்சென்ற சுப்பிரமணியம், அருள்பிரகாசம் (U.K.) திருமதி நேசம்மா சிங்கராசா காலஞ்சென்ற செல்வராசா (S.M.) திருமதி லோகினி இரத்தினராசா திரு. W.B. செல்வநாயகம் ஆகியோரின் மைத்துனரும் திரு. கருணானந்தன் (கனடா), திருமதி சித்திரா ராஜிசெல்வன் ஆகியோரின் அன்பு மாமனாரும் கிறேஸ்மேரி தேவரஞ்சி, மார்க்கஸ் சுதேசன் குவின்டன் ஆகியோரின் அன்புப் பேரனும் ஆவார்.

அன்னாரின் இறுதி ஆராதனை 24-02-90 பி.ப. 4மணிக்கு நுணாவில் மேற்கில் இருக்கும் அவரது இல்லத்தில் நடைபெறும் என்பதை அனைவருக்கும் அறியத்தருகின்றேம்.

தகவல்:
T. Ratnaraja (G.S.O.)
Dr. P. Singarajaa
நுணாவில் மேற்கு,
சாவகச்சேரி. (2625)

### திருச்செல்வம் மேரிஆன் செல்லம்மா

[மாட்டின் லேன், யாழ்ப்பாணம்.]

யாழ்ப்பாணம் மாட்டின் லேனில் வசித்தவரும், தற்போது இல. 5, குமார வீதி, முத்திரைச் சந்தையில் வசிப்பவருமாகிய திருச்செல்வம் மேரிஆன் செல்லம்மா காலமானார். அன்னாரின் நல்லடக்கம் பற்றிய விபரம் பின்னர் அறிவிக்கப்படும்.

தகவல்:
எஸ். ஜே. செல்லத்துரை (ஜேயெந்திரா)
கிராமசேவை அலுவலர்,
இருபாலை.
(11860)

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org